Registered as a Newspaper
# உதயன்
புதன்பொய்கை
பக்கங்கள் 16+IV
விலை ரூ. 50
சுடர் : 38
கதிர் : 291
புதன்கிழமை 13 செப்ரெம்பர் 2023
ஆவணி 27 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## நல்லூரானுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணம், செப். 13
அலங்காரக்கந்தன் என்று அழைக்கப்படும் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று காலை 6.15 மணிக்கு இடம்பெறவுள் »15



கொக்குத்தொடுவாய் புதைகுழி

## கழிவுநீரைச் சுத்திகரிக்கும் ரஷ்யக் கருவி நேற்று மீட்பு

முல்லைத்தீவு, செப். 13
முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வின், ஆறாம் நாள் நடவடிக்கைகளின்போது, கழிவு தண்ணீரைச் சுத்திகரித்து அருந்துவதற்குப் பயன் படுத்தப்படும் ரஷ்யத் »15

## பல்கலைக்கழக நுழைவில்
# முன்னிலையில் தமிழர் தாயகம்

- கிழக்குக்கு முதலிடம்
- இரண்டாமிடத்தில் வடக்கு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13
உயர்தரப் பரீட்சைகளின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்ட பல்கலைக்கழகங்களின் நுழைவில் கிழக்கு மாகாணம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. வடக்கு மாகாணம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. »15

## நாடெங்கிலும் நேற்று மருத்துவர்கள் போர்!

யாழ்ப்பாணம், செப். 13
நாடளாவிய ரீதியில் உள்ள அரச மருத்துவ மனைகளில் நேற்றையதினம் மருத்துவர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வடமாகாண மருத்துவமனைகளிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட் »15

## 53 பவுண் நகைகள் கோப்பாயில் திருட்டு

யாழ்ப்பாணம், செப். 13
யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 53 பவுண் நகைகள் மற்றும் 100 டொலர் பணம் என்பன நேற்றுத் திருடப்பட்டுள்ளன. »15

## போதனா மருத்துவமனைக்குள் 'ஸ்மார்ட்' அலைபேசிக்குத் தடை
### மருத்துவமனைப் பணிப்பாளர் அதிரடி

யாழ்ப்பாணம், செப். 13
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குள் கடமைநேரத்தில் தாதியர்கள், சுகாதார உதவியாளர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள், நோயாளர்களைப் பராமரிக்கும் பணியில் ஈடுபடுவோர் ஆகியோர் 'ஸ்மார்ட்' »15

தனியார் விடுதியில் பயங்கரம்

## 12 வயது பேர்த்தியைக் கொன்றுவிட்டு பூட்டிய அறைக்குள் சடலத்துடன் பாட்டி!

யாழ்ப்பாணம், செப். 13
யாழ்ப்பாணம், பரமேஸ்வரா சந்திப் பகுதியில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் தங்கியிருந்த 12 வயதுச் சிறுமி சடலமாக மீட்கப்பட்ட நிலையில், சிறுமியின் பேர்த்தியார் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். »15






# சர்வதேச கண்காணிப்புடனான விசாரணை மட்டுமே தேவை!



ஈஸ்டர் தாக்தல் விவகாரத்தில் கத்தோலிக்க திருச்சபை விடாப்பிடி

கொழும்பு, செப். 13

**உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச நெறிமுறைகளைப் பின்பற்றி, சர்வதேச கண்காணிப்புடன்தான் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளது கத்தோலிக்க திருச்சபை. அத்துடன், ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ள விசாரணைக்குழு யோசனையையும் திருச்சபை அடியோடு நிராகரித்துள்ளது.**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் பேராயர் குழுவின் உறுப்பினரும், கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான பேச்சாளர்களில் ஒருவருமான அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ இது தொடர்பில் தெரிவித்ததாவது:-

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல் - 4' அலைவரிசை வெளியிட்ட வீடியோ தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார் என ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று அமைப்பதற்கான உத்தேசமும் உள்ளது எனவும் கூறப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக இதற்கு முன்னரும் இரு குழுக்கள் அமைக்கப்பட்டன. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவற்றின்மூலம் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறு கிடைக்கவில்லை என்பதை முழுநாடும் அறியும். மக்களின் பணமும், நேரமும்தான் வீணடிக்கப்பட்டது. எனவே, ஜனாதிபதியால் ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் நியமிக்கப்படும் குழுவோ அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழுவோ பக்கச்சார்பற்ற வகையில் செயற்படும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை.

உள்ளக விசாரணைக்குழுக்களிடம் சாட்சியம் வழங்கினால் தமக்கு அச்சுறுத்தல் என சாட்சியாளர்கள் அச்சப்படக்கூடும். அரசியல் தலையீடுகள் இடம்பெறும். எனவே, சுதந்திரம் இருக்காது. வெளிப்படைத் தன்மையுடன் சுயாதீன விசாரணை இடம்பெற வேண்டுமென்றால் சர்வதேச கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பு நிச்சயம் இருக்கவேண்டும், சர்வதேச நடைமுறைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

'சனல்-4' இல் முன்வைக்கப்பட்டுள்ள தகவல்களை பாதுகாப்பு அமைச்சு நிராகரித்துள்ளது. விசாரணை இன்றியே நிராகரிக்கப்பட்டுள்ளது. விசாரணை நடத்திய பின்னர் பதில்களை வழங்கி இருந்தால் அதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். நாட்டுக்கு எதிராகவோ அல்லது அரசுக்கு எதிராகவோ 'சனல் - 4' இல் குற்றச்சாட்டு இல்லை. நபர்கள் தொடர்பிலேயே முன்வைக்கப்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறு இருக்கையில் பாதுகாப்பு அமைச்சு ஏன் இவ்வாறு செயற்பட வேண்டும்? - என்றார். (ம-44)

போதைப்பொருள்களுடன்

## மூன்று மாதத்தில் 154 பேர் கைது!

யாழ்ப்பாணம், செப். 13

கஞ்சா, ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள்களுடன் கடந்த மூன்று மாதங்களில் 154 பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-125)

## கனகராயன் குளத்தில் போதை மறுவாழ்வகம்

யாழ்ப்பாணம், செப். 13

வவுனியா- நெடுங்கேணி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கனகராயன் குளத்தில் உள்ள பழைய புகையிரத திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தை அமைப்பதற்கு நேற்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற சிறப்புக் கலந்துரையாடலின்போது வடக்கில் போதைப்பொருள் மறுவாழ்வு மையத்தை அமைப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலிலேயே வவுனியா- நெடுங்கேணிப் பகுதியில் இந்த மறுவாழ்வு மையத்தை அமைப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும், இதர முக்கியமான கலந்துரையாடல்களின்போதும் வடக்கில் போதைப்பொருள் மறுவாழ்வு மையமொன்றை அமைப்பது தொடர்பில் பல முறை கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளபோதிலும், இதுவரை எந்தப் பேச்சும் செயல்வடிவம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-125)



## வானளாவிய சப்பறத்தில் நல்லைக் கந்தன் உலா

யாழ்ப்பாணம், செப். 13

வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத் திருவிழாவின் சப்பறத் திருவிழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை வெகுசிறப்பாக நடைபெற்றது.

நேற்று மாலை 4.45 மணியளவில் வசந்த மண்டபத்திலும், கொடித்தம்பத்திலும் பூசை, தீபாராதனை வழிபாடுகள் மற்றும் யாகபூசை என்பன இடம்பெற்றதைத் தொடர்ந்து அலங்கார நாயகனாக நல்லூர் வேற்பெருமானும், முருகப் பெருமானின் இரு பெரும் சக்திகளான வள்ளி, தெய்வயானை நாயகியரும் இலங்கையிலேயே உயரமான சப்பறத்தில் எழுந்தருளினர். (ம-66)

## யாழ்.இந்துக் கல்லூரியின் அருங்காட்சியகம் திறப்பு!

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். இந்துக் கல்லூரியின் அருங்காட்சியகத் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-66)

'13'ஆவது திருத்தம் தொடர்பில்



## நாடாளுமன்றின் முடிவையே செயற்படுத்துவார் ஜனாதிபதி

நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

அரசமைப்பின் '13'ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றம் அனுமதிக்கும் விடயத்தை மட்டுமே ஜனாதிபதி செயற்படுத்துவார் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு :-

வடக்கு- கிழக்கில் பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. காணாமலாக்கப்பட்டோர் அலுவலகம், இழப்பீட்டுப் பணியகம், நல்லிணக்க அலுவலகம் என எனது அமைச்சின்கீழ் மூன்று நிறுவனங்கள் உள்ளன. இதன்மூலம் நடமாடும் சேவை என பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வடக்கில் மக்கள் பிரதிநிதிகளுடனும் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

டக்ளஸ் தேவானந்தா போன்ற அரசியல்வாதிகள் அடிப்படைவாத நிலைப்பாட்டில் இல்லை. ஒரு சில எம்.பிக்களே 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுலாக்குமாறு கோரினர்.

'இது சம்பந்தமான யோசனைகளை முன்வைக்கவும், அமுலாக்குவதா ? இல்லையா ? என்பது குறித்து என்னால் தீர்மானம் எடுக்க முடியாது. நாடாளுமன்றத்தில் முன்வைத்து, அனைத்துக் கட்சிகளாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயங்களை செயற்படுத்துகின்றேன்' என ஜனாதிபதி இதற்குப் பதிலளித்துள்ளார். இது நாடாளுமன்றத்துக்கு உரிய பணி. அனைத்துக் கட்சிகளும் இணக்கத்துக்குவரும் விடயத்தை எம்மால் செய்ய முடியும்.

இந்த 13ஆவது திருத்தச்சட்டம் அரசியலுக்காகவும் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. அதற்காகப் போராடுகின்றோம் என வடக்கு அரசியல்வாதிகளால் அம்மக்கள் மத்தியில் கருத்து உருவாக்கப்படலாம். இந்தியாவிலும் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆட்சி அமைக்க தமிழக வாக்குகளும் அவசியம் என்பது பிரதமர் மோடிக்கு தெரியும். அதனால் அண்மையில் கச்சதீவைப் பற்றியும் அவர் கதைத்திருந்தார். இது பற்றி நாம் புரிந்துகொள்ள வேண்டும். இது சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கலந்துரையாடியே முடிவெடுக்கப்பட வேண்டும்' - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரியாஸ்பத்திரியில வேலை செய்யிற நேர்ஸ்மார், அட்டெண்டர்மார், செக்கியூரிட்டியாக்கள், நோயாளரைப் பராமரிக்கிறவை எல்லாரும் நாளையில இருந்து வேலைத்தளத்தில ஸ்மார்ட்போன் பாவிக்க ஏலாதெண்டு அதிரடியா தடை போட்டிருக்கிறார் பணிப்பாளர் சத்தியமூர்த்தி. அண்டைக்கு பட்சியும் இதைப்பற்றிச் சொல்லியிருந்தது.

வருத்தக்காரரைப் பாக்கிறதைவிடவும் போனைப் பாக்கிறதிலதான் ஆஸ்பத்திரியளில வேலை செய்யிற ஆக்கள் கடும் அக்கறையா இருக்கினம். வீட்டில அவைக்கும் கடும் வேலையள் இருக்கும். பிள்ளையளைப் பிராக்காட்டுறது, பள்ளிக்கூடம், ரியூசனுக்கு அனுப்பிறது, சமைக்கிறது, உடுப்புத் தோய்க்கிறது எண்டு ஆயிரத்தெட்டு வேலையள் அவைக்கு இருக்கு. அந்த அத்தடிக்குள்ள நிம்மதியா ரீவியோ, போனோ பாக்க ஏலாது. அதாலதான் அவை ஆஸ்பத்திரியில வந்திருந்து, ஆறுதலா நிம்மதியா ஸ்மார்ட் போனில ரீவி நாடகங்கள், சுப்பர் சிங்கர் புரோக்கிராம் எண்டு நாட்டுக்கும் வீட்டுக்கும் அவசியமான நிகழ்ச்சியளைப் பார்ப்பினம். அப்பிடி அவை போனுக்குள்ளையே பூந்துபோய் இருக்கேக்க, வருத்தக்காரரோ இல்லாட்டி அவையோட நிக்கிறவையோ ஏதும் கேட்டால் கோபம் பத்திக்கொண்டு வரத்தானே செய்யும்?

இப்பிடிப்பட்ட நிலைமை இனியில்லாமல் போகப்போகுது. கையில ஸ்மார்ட் போன் இல்லாட்டி அந்தந்த அலுவல் அந்தந்த நேரத்துக்கு நடக்கப் போகுது. நோர்மல் போன் மட்டும் தான் ஆஸ்பத்திரியில வேலை செய்யிறவை பாவிக்கலாமெண்டதால, அவசியமான 'கோல்' மட்டும்தான் கதைக்கலாம். அதால இனிமேல் அவையள் ஆற அமர இருந்து போனில் உந்த யூரியூப், சீரியல் நாடகங்கள், பாட்டுகள், ரிக்ரொக் ஒண்டும் பாக்க ஏலாதநிலை. ஏதோ ரூருக்கு வந்தவை மாதிரி வார்ட்டுகளை ஒரு ரவுண்ட் வலம் வந்திட்டு, பிறகு தாங்களும், தங்கட போனுமா இருக்கிறவைக்கு இனிமேல் ஆப்புத்தான். இந்தத் திட்டம் முதலே நடைமுறையில இருந்தாலும், அதை ஒருத்தரும் பின்பற்றாமல் விட்டிட்டினம். இப்ப அந்தச் சின்னப்பிள்ளைக்கு மணிக்கட்டோட கையை வெட்டினபிறகு, இனிமேல் இப்பிடியான பிழையள் நடக்கக்கூடாது எண்டதுக்காக சில திட்டங்களை பணிப்பாளர் கொண்டுவர நினைக்கிறார். ஆனால் இந்தமுறையும் நாலைஞ்சு நாள் ஸ்மார்ட் போனை கொண்டுவராமல் இருந்திட்டு பிறகு உலக்கை தேய்ஞ்சு உளிப்பிடியான மாதிரி பிறகும் பழையபடி, ஆஸ்பத்திரியில போனைத் தாலாட்டிக் கொண்டிருக்கிற வேலைக்கு இடமளிக்காமல், அதைக் தொடர்ச்சியாக் கண்காணிக்கவும் வேணும். இலங்கை அரசாங்கம் பணிப்புறக்கணிப்பு நடக்கேக்க சில துறைகளை அத்தியாவசிய சேவையா பிரகடனம் செய்யிற மாதிரி, இன்னொரு அசம்பாவிதம் நடந்த பிறகு 'ஸ்மார்ட்' போனைக் கொண்டுவர வேண்டாமெண்டு பேந்துமொருக்கா இப்பிடி தடைபோட்டு சுற்றறிக்கை விடுகிற நிலைமை வரக்கூடாது. அப்பதான் சனங்களும் பெரியாஸ்பத்திரிக்குப் போனால் 'நல்ல கவனிப்பு, நல்ல மருத்துவம்' எண்டு நம்பிக்கையாப் போவினம்.



- பட்சி

padsi@uthayan.com

# அன்னதானம்

யாழ்ப்பாணம், செப்.13

நல்லூர் தேர் மற்றும் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு, நீர்வேலிப்பகுதியிலுள்ள கலியுக வரதன் இந்து மன்றத்தால் வழமை போன்று இரு தினங்களும் யாழ். மாநகரசபை அருகாமையிலுள்ள ஆயுள்வேத மண்டபத்தில் அன்னதான நிகழ்வு நடைபெறும் எனவும் அனைத்து அடியார்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ய)

# விருதுகளுக்கு விண்ணப்பம்!

யாழ்ப்பாணம், செப். 13

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் இந்த ஆண்டுக்கான 'கலைப்பரிதி' மற்றும் 'இளங்கலைஞர்' விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் கலைஞர்கள் விண்ணப்பப் படிவங்களை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரக் கிளையில் பெற்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதிக்கு முன்பதாக பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கவேண்டும்.

விண்ணப்பிப்போர் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரிவுக் குட்பட்டவராக இருத்தல் வேண்டும், 40 வயதுக்கு மேற்படாதவராக இருக்கவேண்டும், கடந்த காலங்களில் 'கலைக்கலசம்', 'கலைப்பரிதி' விருதுகள் மற்றும் பிரதேச கலாசார அதிகாரசபையால் 'கலைத்தளிர்', கலாசார பேரவையால் 'இளம் கலைஞர்' விருது பெற்றவர்கள் இந்த விருதுக்கு விண்ணப்பிக்க முடியாது என்பன நிபந்தனைகளாகும் என்று பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி அறிவித்துள்ளார். (ச-இ)

# பஸ்கள் விபத்து 15 பேர் காயம்!

கொழும்பு, செப். 13

இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 15 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கேகாலை, அவிசாவளை பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து எம்பிலிப்பிட்டிய நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸும் , எம்பிலிப்பிட்டியவிலிருந்து கேகாலை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸுமே மோதி விபத்துக்குள்ளாகின. விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளதுடன் 11 பேர் சிறுகாயங்களுடன் கரவனல்ல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்து தொடர்பில் ருவன்வெல்ல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்






# நல்லூரான் சிறப்பம்சம்

## வேரறுப்பாய் வேலே...!

தேரேறும் யாழ்.மண்ணின் தேன் தமிழ் அழகே
பேரருளே பொக்கிஷமே பொழியுமருள் திருவே
சீர்மெருது சித்தலமா யெம் சந்ததிகள் செழிக்க
கோரமிகு போக்குகளை வேரறுப்பாய் வேலா!

- மானியூர் ரட்ணேஸ்

## ஆறுமுகன் தேரில் இன்று

நல்லை வளர் ஆறுமுகன் தேரில் இன்று வருகிறான்
அழகொளிரும் முகத்துடனே தேரில் இன்று வருகிறான்
அருள்மொழியும் முகங்களுடன் ஆறுமுகன் இன்று வருகிறான்
தேவியர்கள் அணைத்திருக்க ஆறுமுகன் இன்று வருகிறான்
அடியாரெமக் கருள்தரவே தேரில் உலா வருகிறான்
அடியார் நாங்கள் வணங்கிடவே தேரில் இன்று வருகிறான்
அடியார் நாங்கள் ஆறுமுகனைத் துதித்து நிற்போமே
அடியாரெமக் கருள்கவென்று வேண்டி நிற்போமே!

- முருக

## உள்ளத்திலே குடிகொள்ள தேரேறி வாராய்

நாடி வந்தேன் கந்தா நாடி வந்தேன்– நல்லூர்
நல்லையம் பதியானைக் காண வந்தேன்
ஓடி வந்தேன் முருகா ஓடி வந்தேன் – முருகனின்
ஓம் என்னும் மந்திரத்தை கேட்க வந்தேன்

ஆடி வந்தேன் வேலா ஆடி வந்தேன்– வண்ணக்
காவடி எடுத்தாடி ஆடி வந்தேன்
வண்ணக் காவடி எடுத்தாடி ஆடி வந்தேன்

பாடி வந்தேன் குமரா பாடி வந்தேன்– பார்வதியாள்
பாலனைப் பாடி வந்தேன்– நித்தமும்
பார்வதியார் பாலனைப் பாடிடுவேன்

தேடி வந்தேன் கந்தா தேடி வந்தேன்– எந்தன்
தேரோடும் வீதியெல்லாம் நான் தவழ்ந்தேன்
தேரோடும் வீதியெங்கும் தான் தவழ்ந்தேன்

வள்ளி தெய்வயானையோடு தங்கரதம் மீதமர்ந்து
புள்ளி மயில் வாகனனே தேரேறி வாராய்
அள்ளி அருள் சுரக்கும் ஆறுமுகத்தழகனே
வள்ளி மயில் மீதேறி தேரேறி வாராய்

- திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை,
சாவகச்சேரி

## அரக்கர்களை அழிக்க ஓடோடி வா கந்தா

சுட்ட பழம் கொடுத்து ஔவைக் கிழவியின்
ஆணவத்தை அடக்கிய குமரா
சூரபத்ம அரக்கனை வதம் செய்து– அவனது
சேவலையும் மயிலையும் உனதாக்கி– அவனை
இரட்சித்த பெருந்தகையே
சிவசக்தியின் இளைய திலகமே
நவீன அரக்கர்களை அடியோடு அழித்து
காக்க உடன் பிரபஞ்சத்துக்கு ஓடிவா

க.ஜெயராஜா, கரவெட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபிக்கு வைத்த இலக்கில் சிக்கிய இத்தாலிய விமானம்

## அந்தநாட்டு முன்னாள் பிரதமர் பரபரப்புத் தகவல்

**ரோம், செப்.13**
**1980ஆம் ஆண்டு அப்போதைய லிபிய ஜனாதிபதி கேணல் கடாபியைக் கொல்வதற் கான பிரான்ஸ் படையினரின் முயற்சியில் 81 பேர் பயணித்த இத்தாலிய பயணிகள் விமானம் கவனயீனமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று இத்தாலியின் முன்னாள் பிரதமர் குய்லி யானா அமாட்டா பரபரப்புக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார்.**

1992 முதல் 1993 மற்றும் 2000 முதல் 2001 ஆண்டு காலப்பகுதிகளில் இரு தடவைகள் இத்தாலியின் பிரதம ராகப் பதவி வகித்தவர் குய்லியானோ அமாட்டோ. 1980 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி, பயணி கள் விமானமொன்று இத்தாலியின் போலோக்னா நகரிலிருந்து இத்தாலி யின் சிசிலி தீவிலுள்ள பாலேர்மோ நகரை நோக்கிப் பயணித்தது.

இந்த விமானம், மத்திய தரைக்கடலில் சிசிலி தீவுக்கு அருகிலுள்ள உஸ்டிக்கா தீவில் வீழ்ந்து நொருங்கியது. விமா னத்திலிருந்த 77 பயணிகள் உட்பட 81 பேரும் உயிரிழந்தனர். இத்தாலியில் இடம்பெற்ற மிக மோசமான விமான விபத்து இதுவாகும்.

இந்தச் சம்பவம் நடந்து 43 வருடங்கள் கடந்த நிலையில், இத்தாலிய முன்னாள் பிரதமர் குய்லியானோ அமாட்டோ, இத்தாலியின் லா ரிபப்ளிக்கா பத்திரி கைக்கு அண்மையில் அளித்த செவ்வி யில் பரபரப்புத் தகவல்களை வெளியிட் டுள்ளார்.

'அமெரிக்காவின் உதவியுடன், கேணல் கடாபியை ஆட்சியிலிருந்து அகற்றுவ தற்கு பிரான்ஸ் முயற்சித்தது. சம்பவ தினத்தில் நேட்டோ விமானங்களின் போர்ப் பயிற்சியொன்று அந்தப் பகுதி யில் நடத்தப்பட்டது.

லிபிய இராணுவ விமானமொன்றே உண்மையான இலக்காக இருந்தது. யூகோஸ்லாவியாவுக்கு சென்றிருந்த கேணல் கடாபி, அந்த விமானத்தில் பய ணிப்பார் என நம்பப்பட்டது. ஆனால் இதுதொடர்பில் கடாபிக்கு இத்தாலி யினால் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதனால் அந்த இராணுவ விமானத் தில் அவர் பயணிக்கவில்லை என அமாட்டோ கூறியுள்ளார்.

ஆனாலும் பிரான்ஸ் போர் விமானத்தி லிருந்து ஏவுகணையால் இத்தாலியின் பயணிகள் விமானம் சுட்டுவீழ்த்தப்பட் டது என்றும் அமாட்டோ கூறியுள்ளார்.

முன்னாள் பிரதமர் அமாட்டோவின் கருத்துத் தொடர்பாக பிரான்ஸ் அரசு உடனடியாகக் கருத்துத் தெரிவிக்க வில்லை. இந்த விமானம் எப்படி விபத் துக்குள்ளானது என்பது நீண்டநாள் களாக மர்மமாகவே இருந்தது. அது சுட்டுவீழ்த்தப்பட்டிருக்கலாம் அல்லது விமானத்தில் குண்டு வெடித்திருக்க லாம் என சிலர் கூறியிருந்தனர். பல வருடங்களின் பின் கடலடியிலிருந்த விமானச் சிதைவுகள் ஆராய்ப்பட்டபின் னர், அது ஏவுகணையால் சுடப்பட்டிருக் கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்பட் டிருந்தது.


சம்பவ நாள் இரவில் அந்தப் பகுதியின் வான் பரப்பில் இராணுவ நடவடிக்கை எதுவும் இடம்பெறவில்லை என அமெரிக்க, பிரான்ஸ், நேட்டோ அதிகாரிகள் அப்போது அறிவித் திருந்தனர்.

லிபிய, பிரான்ஸ் போர் விமா னங்களுக்கு இடையிலான மோதலின்போது, தவறுதலாக இந்தப் பயணிகள் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று, அந் தச் சம்பவம் இடம்பெற்ற காலத் தில் இத்தாலிய பிரதமராகப் பதவி வகித்த, பிரான்சிஸ்கோ காசிகா 2008 ஆம் ஆண்டு கூறியிருந் தார். இந்தப் பயணிகள் விமானத்தைப் பாதுகாக்கத் தவறியமைக்காக, பாதிக் கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு 100 மில்லியன் யூரோ இழப்பீட்டை இத்தாலிய அரசு வழங்கவேண்டும் என இத்தாலிய நீதிமன்றம் 2011 ஆம் ஆண்டு உத்தரவிட்டிருந்தது.

அதேவேளை, கேணல் கடாபி 2011 ஆம் ஆண்டு லிபிய உள்நாட்டுப் போரில் கொல்லப்பட்டார்.

இத்தாலியின் தற்போதைய பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி அமாட்டோ வின் குற்றச்சாட்டு தொடர்பில் கருத் துத் தெரிவித்தபோது, அமாட்டோவின் கருத்து கவனத்திற்கொள்ளத்தக்கது. அவர் தனது சொந்த அனுமானங்க ளுக்கு அப்பால், உறுதியான ஆதாரங் களை முன்வைக்கவேண்டும் எனக் கூறியுள்ளார்

அமாட்டோவின் கருத்து பிரான்ஸ் - இத் தாலிய உறவுகளில் அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடும் எனக் கருதப்படு கிறது. (எ-இ)





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட 34ஆவது மாவட்ட மட்ட விளையாட்டு விழாவில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அதில் பச்சிலைப்பள்ளி பிரதேச அணி முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (எ-இ)

## குண்டு துளைக்காத ரயிலில் ரஷ்யாவுக்கு பயணித்த கிம்

பியாங்யாங், செப்.13

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் குண்டு துளைக்காத ரயிலில் ரஷ்யாவுக் குச் சென்றுள்ளார் என்று வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவ ஆயுத ஒப்பந்தம் தொடர்பில் கலந்துரையாடுவதே இந்த அவசரப் பயணத்தின் நோக்கமெனத் தெரிவிக்கப் படும் நிலையில் ரஷ்ய தலைவர் விளா டிமிர் புடினும், கிம் ஜோங் உன்னும் இது தொடர்பில் சிறப்பு பேச்சு நடத்த உள்ளனர்.

கிம்மின் திடீர்ப் பயணத்தை அமெரிக்கா உன்னிப்பாக அவதானிக்கின்றது என் றும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (எ-இ)

## திறந்த பல்கலையால் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், செப். 13

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிப்போர் விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 15ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விவரங்களை 021 222 3374 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு பெறலாம் என யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். உற வினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். வீண் செலவுகள் ஏற்படும்.

**இடபம்:** அனுகூலமான நாள். சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக் கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரி யங்களில் அனுகூலம் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனை பய னுள்ளதாக இருக்கும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** பொறுமையுடன் செயற் படவேண்டிய நாள். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். அனுசரித்துச் செல்லவும்: உறவினர்களால் குடும்பத்தில் குழப் பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூல மான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெ டுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். பணம் கேட்டு நச்சரிப்பார்கள். மனவருத்தம் நீங்கி சுமுக உறவு ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் கூடு தல் கவனம் தேவை. வழக்கமான பணி களிலும் நிதானம் அவசியம். பொறுப்பு களின் காரணமாக அலைச்சல் ஏற்ப டக்கூடும். சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

**மகரம்:** மகிழ்ச்சிதரும் நாள். பிணக்குகள் நீங்கும். முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை.

**கும்பம்:** நீண்ட நாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆதாயம் கிடைக்கும். சுபச்செலவுகளுக்கு வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பொறுப்புகள் அதிகரிக்கும். சற்று சோர்வு உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வேலுண்டு பயமில்லை வீதித்தடையால் பயனில்லை

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தனுக்கு இன்று தேர். யாழ். குடாநாட்டின் அதியுச்சமான பண்பாட்டுப் பெருவிழாவாக நல்லூர்த் திருவிழா தமிழ்மக்களின் மனதில் ஊறிப்போய் பல தசாப்தங்கள் கடந்துவிட்டது. யாழ்ப்பாணம் என்றாலே அதன் குறியீடாக, அடையாளமாகப் பயன்படுத்துமளவுக்கு நல்லூர்க்கோயில் மாறிவிட்டது. என்னதான் வெளியே ஆடம்பரமாக, அலங்காரனாக கந்தன் உலாவந்தாலும், உள்ளே வேலவனைத் தரிசித்து, அர்ச்சனை செய்ய வெறும் ஒரு ரூபாவே கட்டணமாக இன்றளவும் நீடிப்பதும் இந்தக் கோயிலின் மகத்துவத்தை இன்னும் நிலைபேறடையச் செய்துள்ளது. இப்படிப்பட்ட நல்லூர்க் கந்தனுக்கு இம்முறை புதிய சப்பறம் அமைக்கப்பட்டிருந்தது. இலங்கையிலேயே மிக உயரமான சப்பறமும் இதுதான். புதிய, உயரமான சப்பறத்தைக் காணவென கந்தசுவாமியின் பக்தர்களுக்கு ஆவலிருக்கத்தானே செய்யும்? அதனால் நாலாதிசைகளில் இருந்தும் மக்கள் வெள்ளம் நல்லூருக்கு நேற்றுப் படையெடுத்தது.

கொரோனாப் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி போன்றவற்றால் கடந்த 4 வருடங்களாக நல்லூர்க் கந்தனுக்கு வரும் அடியார்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆனால், அதற்கு வட்டியும் முதலுமாக நேற்றுமாலை பெரும் சனசமுத்திரத்துக்குள் நல்லூர்க் கோயில் சுற்றுப்புறம் திணறத் தொடங்கிவிட்டது. ஈஸ்டர் தாக்குதலில் எதிரொலியாக நல்லூரும் தாக்கப்படலாம் என்ற வதந்தி, கொரோனா காலத்தில் சுகாதார நடைமுறையைக் கண்காணித்தல் போன்றவற்றுக்காக, நல்லூர் ஆலயத்தின் மேற்குப் புற வீதியில் இருக்கும் யாழ்.– பருத்தித்துறை வீதி மூடப்பட்டு, நல்லை ஆதினத்தை ஒட்டியதாக இருக்கும் வீதியாலேயே பக்தர் ஆலயத்துக்குள் நுழையவும், வெளியேறவும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். கடந்த நான்கு வருடங்களாகவும் பக்தர்கள் தொகை குறைவென்பதால், ஒற்றைவீதியூடான பக்தர்களின் போக்குவரத்தில் பெரியளவிலான இடர்கள் தோன்றியிருக்கவில்லை. ஆனால், இம்முறை சப்பறத்துக்கு திரண்ட சனக்கூட்டத்தின் உள்நுழைவுக்கும், வெளியேறுகைக்கும் இந்த ஒற்றைவீதி வாசலால் சமாளிக்கமுடியவில்லை. நேற்றுமுன்னிரவு இந்த வீதியில் பெரும் சனநெரிசல் ஏற்பட்டது. குழந்தைகள் நெரிசலைச் சமாளிக்கமுடியாமல் வீரிட்டு அலறின. பெண்களில் சிலர் நெரிசலால் மூர்ச்சையுற்றனர். இவ்வாறு மூர்ச்சையுற்றவர்களை மருத்துவமனையில் சேர்ப்பிக்கவென வந்த அம்புலன்ஸ் கூட உள்ளே நுழையமுடியாத அளவுக்கு அந்தவீதி சனக்கூட்டத்தால் இறுகிப் போய்விட்டது. 'நாங்கள் இந்த வீதித்தடையைத் தாண்டி உயிரோடு வந்ததே பெரிய விடயம்' என்று பக்தர்கள் சொல்லுமளவுக்கு சனநெரிசல் ஏற்பட்டமைக்கு காரணம், மேற்கு வீதியில் உள்ள யாழ்.– பருத்தித்துறை வீதியூடான உள்வருகை, வெளிச்செல்லல் என்பன மறுக்கப்பட்டதுதான். 'வேலுண்டு பயமில்லை, ஆனால் வீதித்தடையால் பெரும் வினையே' என்று பாடவேண்டிய நிர்ப்பந்தம் பலருக்கு ஏற்பட்டிருந்தது. இரு வீதியால் பக்தர்கள் உள்வரவும், மற்றைய வீதியால் வெளியேறவும் ஏற்பாடுகளைச் செய்திருந்தால் இப்படியான அசௌகரியங்களைத் தடுத்திருக்கமுடியும். எல்லாவற்றையும் பார்த்துப் பார்த்துச் செய்யும் நல்லூர் நிர்வாகமும், யாழ்.மாநகரசபையும் ஏன் இந்தவிடயத்தில் கோட்டை விட்டன? மக்களைக் கட்டுப்படுத்துவதற்காகக் களமிறக்கிவிடப்பட்ட சிவப்புவேட்டி அணியினராவது இந்த அவலநிலையைக் கண்டு, அதனை உரியவர்களிடம் தெரிவித்து சனநெரிசலைத் தவிர்க்க ஏன் முன்வரவில்லை? இறுதியாக கந்தனைக் கும்பிட வந்து இப்படியான நெரிசலில் மக்கள் சிக்கித் தவிப்பதைக் கண்டுசகிக்க முடியாத இளைஞர்கள் சிலர் யாழ்.– பருத்தித்துறை வீதியூடான பகுதியை மூடி மறைத்திருந்த வேலித்தடைகளை அடித்து உடைத்தபின்னர் தான் ஓரளவுக்கு சனநெரிசல் கட்டுக்குள் வந்தது. இல்லாவிட்டால் விபரீதமான சம்பவங்கள் நேர்ந்திருக்கக்கூடும்.

இதனையொரு பாடமாக எடுத்துக்கொண்டு, உடனடியாக மக்களின் போக்குவரத்தை, கோயிலுக்கு வந்து செல்வதற்கான இலகுவான பொறிமுறையை கோயில் நிர்வாகமும், மாநகரசபையும் இணைந்து மேற்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் சப்பறத்தில் நடந்த இதே நெரிசலும், மூர்ச்சையுறுதல்களும், தள்ளுமுள்ளுக்களும் தீர்த்தம், பூங்காவனம் போன்ற திருவிழாவின் கடைசிநாட்களிலும் நிகழக்கூடும். வருமுன் காப்பதே அழகு. அந்த அவசர காரியத்தை உரியவர்கள் உடனே நிறைவேற்றவேண்டும். யாமிருக்கப் பயமேன்? என்று முருகன் மட்டும் சொன்னால் போதாது, கோயில் நிர்வாகமும், மாநகரசபையும் பக்தர்களுக்கும் தம் செயலால் அதை உணர்த்தவேண்டும். உணர்த்துவார்களா?

### நாளொரு நல்வார்த்தை

மாறுதல்கள் நிச்சயம் தவிர்க்க முடியாதவை.
மாற்றங்களை எதிர்கொள்ள மன உறுதி வேண்டும்
மாற்றம் என்பதைத் தவிர மாறாதது உலகில் இல்லை

– கார்ல் மார்க்ஸ் –




கொக்குத்தொடுவாய்

# புதைகுழி விவகாரத்தில் நம்பகமான விசாரணை!

## வலியுறுத்துகின்றது கனடா

**கொழும்பு, செப்.13**

**கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி தொடர்பான விடயங்களை இலங்கை அரசாங்கம் உரிய முறையில் கையாள வேண்டும் என்று கனடா வலியுறுத்தியுள்ளது.**

இலங்கையில் சமாதானம் மற்றும் சுதந்திரத்தைப் பேணுவது தொடர்பாகக் கனடா தொடர்ந்தும் கவனம் செலுத்தும் என்று ஐக்கிய நாடுகளுக்கான கனேடியப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

இந்தப் புதைகுழி தொடர்பான விசாரணைகள் நம்பத்தகுந்த வகையில் அமைய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதேவேளை, கருத்துச் சுதந்திரம், பொருளாதாரம், சமூக வலுவூட்டல், கலாசார உரிமைகள் என்பன சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் என்று ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

அடக்குமுறைகளின் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதை ஏற்க முடியாது என்றும் ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

## சர்வதேச விசாரணைக்கு தடைபோடாது அரசாங்கம்

### கூறுகிறார் மஹிந்த அமரவீர

கொழும்பு, செப். 13

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துவதற்கு அரசு தயார். சர்வதேச விசாரணைக்கு இடமளிப்போம். எவராவது தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு தகுந்த தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:**

சர்வதேச விசாரணையை நடத்துவதற்கு அரசு தயார். சர்வதேச விசாரணைக்கு இடமளிப்போம். அமைச்சரவையில் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்போம். எவராவது தவறிழைத்திருந்தால் தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும் - என்றார். (ச-44)

## சர்வதேச விசாரணையை ஐ.நா.விடம் கோருவேன்

### முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல்-4' வெளியிட்ட காணொலி தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டு என்று ஐ.நா.விடம் நேரில் கோரிக்கை விடுக்கவுள்ளேன் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சனல் - 4 தொடர்பில் விசாரணை அவசியம். ஐ.நா.வும் வலியுறுத்தியுள்ளது. ஐ.நா.வின் இலங்கைப்பிரதிநிதியைச் சந்தித்து, சர்வதேச விசாரணை நடத்தவேண்டும் என்று கோரிக்கை விடுக்கவுள்ளேன். -என்றார். (ச-44)

## நாளை

14.09.2023
வியாழக்கிழமை
ஆவணி 28

சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.33 - 03.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் ஒருமுகத் திருவிழா வேற் படைகள், கோலாட்டத்துடன் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை மாலை வெகுசிறப்பாக நடைபெற்றது. (ய-66)

## குருந்தூர்மலை விவகாரம்

# தீர்க்கக்கூடிய பிரச்சினையை சிக்கலாக மாற்றுகின்றனராம்

### நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவிப்பு

கொழும்பு, செப்.13

**குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் மகாசங்கத்தினரும், இந்து மதத்தலைவர்களும் இணைந்து பேச்சு நடத்தினால் சுமுகத் தீர்வை எட்டக்கூடியதாக இருக்கும். ஏனெனில் சில அரசியல்வாதிகள் இதனை வாக்கு வேட்டைக்காக பயன்படுத்துகின்றனர். இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் அது சம்பந்தமாக செயற்பட்டு வரும் பிக்குகளுடன் கலந்துரையாடியுள்ளேன், அத்துடன், இது சம்பந்தமாக கதைக்கும் தமிழ் எம்.பி.க்களுடனும் (கஜேந்திரகுமார் அல்லர்) பேச்சு நடத்தியுள்ளேன்.

அண்மையில் அங்கு பதற்றமான நிலை ஏற்பட்டது. இதன்போது வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருடன் கதைத்தேன், இதன்போது இங்கு பிரச்சினை வேண்டாம், பேச்சுமூலம் தீர்வு காணலாம் என அவர் மக்களுக்குச் சொன்னார். இந்து மத தலைவர்களுடன், எமது மகாசங்கத்தினர் கலந்துரையாடினால் இப் பிரச்சினையை சுமுகமாக தீர்த்துக் கொள்ளலாம். ஏனெனில் வாக்கு வங்கியை கருத்திற்கொண்டு இவ்விவகாரத்தில் சிலர் அரசியல் நடத்த முற்படலாம் - என்றார். (எ-44)

## ஊழல் எதிர்ப்புச் சட்டம்

# பழைய விசாரணைகளைக் கிளற புதிய ஆணைக்குழுவுக்கு அதிகாரம்

### நீதி அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

தற்போதுள்ள இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு ஏதாவது பிழையான தீர்மானங்களை வழங்கி இருந்தால் அது தொடர்பாக தேடிப்பார்க்கும் பூரண அதிகாரம் புதிய ஆணைக்குழுவுக்கு இருக்கிறது. 15ஆம் திகதியில் இருந்து புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் செயல் வலுப்பெற்ற பின்னர். அரசமைப்புச் சபையின் அனுமதிக்கமைய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படும்.

- இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் தற்போது நடைமுறையில் இருக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் சுயாதீனமாக இல்லை என மக்கள் மத்தியில் கருத்தாடல் ஒன்று இருந்து வருகிறது. அதற்கான நியாயமான காரணங்கள் இருக்கின்றன.

தற்போதைய இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக்குழு 29 வருடங்களாக செயற்பட்டு வந்துள்ளது. ஆனால் இலஞ்சம், ஊழல் நாட்டில் இருந்து அகற்றப்படவில்லை. அதனால் புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் ஒன்றை உருவாக்க நாங்கள் நடவடிக்கை எடுத்தோம்.

புதிய ஊழல் எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படும். அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இந்த வாரம் வெளிவரும். இதுவரை இலஞ்ச சட்டம் செயற்படுத்தப்பட்டது அரச துறைக்கும் அரசியல்வாதிகளுக்கும் மாத்திரமாகும்.

புதிய சட்டத்தின் மூலம் தனியார் துறையின் ஊழல் தொடர்பாக விசாரணை செய்யமுடியும். பாலியல் இலஞ்சம் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் முடியும்.

சட்டவிரோதமான முறையில் சம்பாதித்துக் கொண்ட சொத்துக்களை வெளிநாடுகளில் வைப்பிலிட்டிருந்தால் அவற்றை மீள கையகப் படுத்தும் அதிகாரம் இந்தச் சட்டத்தின் கீழ் இருக்கிறது - என்றார். (எ-இ)

# ஆசிரியர் பற்றாக்குறை நடவடிக்கை எடுங்கள்!

## கோணாவில் ம. வித்தியில் போராட்டம்



கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்துக்குட்பட்ட கோணாவில் மகா வித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி மாணவர்கள், பெற்றோர் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டம் நேற்று செவ்வாய்க் கிழமை காலை பாடசாலை முன்பாக இடம் பெற்றது.

"ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்", "ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்காதீர்கள்" போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் போராட்ட இடத்துக்கு வருகை தந்த கிளிநொச்சி தெற்கு கல்வி வலய அதிகாரிகள், ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய பொருத்தமான வளவாளர்கள் நியமிக்கப்படுவார்கள் என்று எழுத்து மூலம் உறுதிசெய்ததையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது. (ச-214-113)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்க பொறிமுறையை ஏற்படுத்துக

### ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, செப்.13

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து அரசியல் முதலைகளும், பெரிய ஊடக நிறுவனங்களும் அன்று ஒரு பிழையான கண்ணோட்டத்தில் நாட்டில் சமூக சேவை செய்த அமைப்புகள், இஸ்லாமிய அமைப்புகள், முஸ்லிம் தலைவர்களை கூட கண்டி தலதா மாளிகையில் உண்ணாவிரதம் மேற் கொண்டு பதவி விலக வைத்தார்கள். அன்று அரசில் இருந்த 13 க்கும் மேற்பட்டவர்கள் அமைச்சுப்பதவியிலிருந்து விலகினோம். அந்த அளவுக்கு தெற்கில் பெரும் முஸ்லிம் விரோத அரசியல் வீசியது.

நாம் உயிர்த்த ஞாயிறு தாக்குதலை இஸ்லாமிய கோட்பாட்டில் நடத்தப்பட்ட தாக்குதலாகப் பார்க்காமல் அரசியல் தேவைக்காக ஓர் ஆட்சி மாற்றத்தை நோக்கிய உத்தியாகவே இந்த உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை நாம் பார்க்கின்றோம். தற்போது உள்ள மனித உரிமை ஆணையாளர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கூறியிருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சபையானது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஊடாக இந்தத் தாக்குதலை ஒரு பாரதூரமான விடயமாகக் கருதி சட்ட ஏற்பாடுகளையும் விசாரணைப் பொறிமுறைகளை ஏற்படுத்த வேண்டும் எனக் கோருகின்றேன் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் களேபரத்தில் தமிழர் பிரச்சினை மழுங்கடிப்பு

## கிளி. காணாமற்போனோர் சங்கத் தலைவி ஆதங்கம்

யாழ்ப்பாணம், செப். 13

**ஈஸ்டர் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கோரும் பல்வேறு தரப்பினரும் கொடிய போரில் கொல்லப்பட்ட எமது உறவுகளுக்கான நீதி தொடர்பில் மறந்துவிட்டனர். பல ஆண்டுகளாக சர்வதேச விசாரணை கோரும் எமக்கான தீர்வை சர்வதேச ஜெனிவா கூட்டத் தொடரில் வலியுறுத்தவேண்டும்.**

-இவ்வாறு கிளிநொச்சி மாவட்டத்தின் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி கனக ரஞ்சிதம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் மேலும் கூறியதாவது:

கடந்த 12 ,13 ஆண்டுகளாக வீதி ஓரங்களிலும் மரநிழல்களிலும் எமது உறவுகளுக்காக நீதிகோரி போராடிவருகிறோம். ஜெனிவா கூட்டத்தொடர்களிலும் மனித உரிமையைப் பேணுகின்ற நாடுகளிடமும் எடுத்துக் கூறியும், இதுவரையில் எந்தவித நீதியும் எமக்குக் கிடைக்கவில்லை.

தற்போது 56 ஆவது ஜெனிவா கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. அதில் ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் எனத் தெரிவித்து வருகின்றனர்.

கொடூர போரின் மூலம் கொல்லப்பட்ட எமது உறவுகளுக்கும் நீதி கிடைக்கவேண்டும்.

சர்வதேச நாடுகள் ஒன்றுகூடி நடைபெறுகின்ற ஜெனிவா கூட்டத் தொடரில் எமக்கான தீர்வு குறித்து வலியுறுத்தவேண்டும் - என்றார். (ச-113)

## கையை இழுத்தவர் கைது

யாழ்ப்பாணம், செப். 13

வீடொன்றுக்குள் நுழைந்து பெண்ணொருவரின் கையை பிடித்து இழுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மூளாய் பகுதியிலுள்ள வீடொன்றில் நடந்துள்ளது.

வீடொன்றுக்குள் நுழைந்த ஒருவர் பெண்ணொருவரின் கையைப் பிடித்து இழுத்துள்ளார். வீட்டிலுள்ளவர்கள் கத்தி குரலெழுப்பியதையடுத்து சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. முறைப்பாட்டுக்கமைய அதேபகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேகநபர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 19 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)



## நந்திக்கடலருகே கசிப்பு விற்பனை

### சந்தேகநபர் கைது

முல்லைத்தீவு, செப். 13

முல்லைத்தீவு நந்திக்கடல் நீரேரியில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சோதனையில் நேற்றுமுன்தினம் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரையும் சான்றுப்பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)

## விருந்துக்கு கோழிகள் திருடியோருக்கு மறியல்



யாழ்ப்பாணம், செப். 13

வட்டுக்கோட்டையில் கோழிகளைத் திருடிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வட்டுக்கோட்டை துணைவி பகுதியிலுள்ள பெண்ணொருவரின் வீடொன்றில் கோழிகள் திருட்டுப்போயுள்ளன என வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய 21, 22 வயதான அதேபகுதியைச் சேர்ந்த 3 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில் திருடப்பட்ட கோழிகள் பிறந்தநாள் கொண்டாட்டம் ஒன்றுக்காக சமைத்து உண்டமை தெரியவந்தது. சந்தேகநபர்களை மல்லாகம் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (ச -125)

## அபிவிருத்தித் திட்டம் குப்பிழானில் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 13

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் கீழுள்ள வட்டாரம் 4 இல் ஜே/210, ஜே/211 ஆகிய கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அடுத்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் மக்கள் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டம் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

அதில் 2024 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முன்மொழிவுகளைத் தெரிவு செய்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பில் கலந்தாலோசிக்கப்படும் என்று வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-66)

## அறநெறிக் கற்கைகள்; வெள்ளியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் அறநெறி வகுப்புகள் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளன. மேன்மை கொள் சைவ நோக்கில் இந்த வகுப்புகள் இலவசமாக நடத்தப்படவுள்ளன.

பிரதி வெள்ளிக்கிழமைதோறும் பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடனம், பண்ணிசை, மிருதங்கம் உள்ளிட்ட கற்கைகள் இதன்போது கற்பிக்கப்படும் என்று சைவ பரிபாலனசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)

## முகமாலை மாதா திருச்சொரூப பவனி

கிளிநொச்சி, செப். 13

யாத்திரைத் தலங்களில் ஒன்றான முகமாலை புனித வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்தத் திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

16 ஆம் திகதி சிறப்பு ஆராதனை நடைபெற்று மறுநாள் 17 ஆம் திகதி காலை திருநாட்பாடற் பலி பூஜையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். திருவிழா வழிபாடு பளைப் பிரதேச கத்தோலிக்க பங்குத்தந்தை தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-9)



சதுரங்கப் போட்டியில்

# விக்ரோறியா மாணவிகள் ஆசியமட்டத்துக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், செப். 13

ஆசியமட்ட சதுரங்கப் போட்டிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவிகள் இருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைப் பாடசாலைகள் சதுரங்க சம்மேளனத்தால் நடத்தப்பட்ட தேசிய மட்ட சதுரங்கப் போட்டி பதுளை மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த 8, 9, 10 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை பிரதிநிதித்துவப்படுத்திய 13 வயதுக்குட்பட்ட பெண்கள் அணியில் கவிநயா குமரன், 20 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி சார்பில் முகுந்தினி பிரான்சிஸ் தரப்படுத்தலில் முதன்நிலை பெற்று ஆசியமட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச நிர்வாக ஊழல்களை அம்பலப்படுத்த நடவடிக்கை

## ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு



கொழும்பு, செப்.13

**அரசாங்க நிர்வாகத்தில் ஊழல்கள் மிதமிஞ்சியிருப்பதால் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிதியுதவியின் பயன் நாட்டு மக்களுக்குக் கிடைக்கவில்லை. நாட்டுக்கு வரும் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகளிடம் அரசாங்கத்தின் ஊழல் நிர்வாகம் தொடர்பில் ஆதாரங்களுடன் எடுத்துரைப்போம்.**

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரச நிர்வாகத்தில் ஊழல் மோசடி மிதமிஞ்சியுள்ளதால் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய நிதியுதவியின் பயன் நாட்டு மக்களுக்கு கிடைக்கவில்லை. இந்தவாரம் நாட்டுக்கு வரவுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளிடம் அரசாங்கத்தின் ஊழல் நிர்வாகம் தொடர்பில் பல விடயங்களை ஆதாரபூர்வமாக எடுத்துரைப்போம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை இலங்கை இதற்கு முன்னர் 16 தடவைகள் பெற்றுள்ளது.

இந்த முறை வங்குரோத்து நிலையை அடைந்ததன் பின்னர் நீடிக்கப்பட்ட ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்ட அனைத்து நாடுகளும் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையவில்லை. நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்ட நாடுகள் தமது அரச நிர்வாகத்தில் புரையோடிப் போயிருந்த ஊழலை இல்லாதொழித்து பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்தன.

ஊழலை ஒழிக்காத எந்த நாடும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளவில்லை.

வங்குரோத்து நிலைக்கு மத்தியிலும் இலங்கையில் ஊழல் இல்லாதொழிக்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டதன் பின்னர் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் முக்கியமான நிபந்தனைகளைச் செயற்படுத்தவில்லை.

சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அதில் மருந்து கொள்வனவில் இடம்பெறும் மோசடி தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்த்தரப்பின் உறுப்பினர்கள் பல விடயங்களை வெளிப்படுத்தினார்கள்.

இந்த விவாதத்தில் குறிப்பிடப்பட்ட முக்கியமான விடயங்களை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிடம் மொழி பெயர்ப்புடன் சமர்ப்பிப்போம்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிவாரணம் வழங்கவில்லை. கடனுதவி வழங்கியுள்ளது. இந்த கடனுக்கு அடுத்த ஆண்டு ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும். நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடனுதவியின் பயன் நாட்டு மக்களுக்கு கிடைக்கவில்லை - என்றார். (ஏ-இ)

# ரயில் இயந்திர இயக்குநர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

## ரயில் கூரையில் பயணித்த இளைஞன் பரிதாபச் சாவு

கொழும்பு, செப்.13

ரயில் இயந்திர இயக்குநர்களின் பணிப்புறக்கணிப்பால் நேற்று 36 ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்த நிலையில், நெரிசல் காரணமாக ரயிலின் மேற்கூரையில் பயணித்த இளைஞர் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தப் பணிப்புறக்கணிப்புக் காரணமாக அலுவலக ரயில் சேவைகள் உட்பட 36 ரயில் சேவைகள் நேற்று இரத்துச் செய்யப்பட்டன. பல இடங்களில் ரயில் சேவைகள் தாமதமாக நடைபெற்றன.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன்தினம் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் ரயில் இயந்திர இயக்குநர்கள் சங்கம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றது. நேற்றுமுன்தினம் ரயில் இயந்திர இயக்குநர்கள் சங்கத்துக்கும் ரயில் முகாமையாளருக்கும் இடையே அவசர கலந்துரையாடல் நடைபெற்றது. ஆனால் அது தோல்வியடைந்தது.

கடந்த 5 வருடங்களாக தாமதமாகிவரும் தரம் உயர்வை விரைவுபடுத்த வேண்டும், ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டதை அடுத்து மக்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். நெரிசல் காரணமாக மக்கள் ரயில்களின் மேற்கூரைகளில் பயணித்ததை அவதானிக்க முடிந்தது.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலின் மேற்கூரையில் பயணித்த இளைஞர் ஒருவர் ஹாரபே பகுதியில் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார். (ஏ-இ)

# புதிய கட்சிக்கு கோத்தா ஆதரவு

கொழும்பு, செப்.13

புதிய அரசியல் கட்சி ஒன்றுக்கு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆதரவளிக்க உள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது. கொழும்பில் உள்ள ஆங்கில ஊடகம் ஒன்று இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம் பதவியிலிருந்து அகற்றப்பட்டது முதல் கடும் மௌனத்தை கடைப்பிடித்து வந்த முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அவரது சகாவும் ஊடக உரிமையாளருமான ஒருவர் ஆரம்பித்துள்ள புதிய கட்சி மூலம் பாதிக்கப்பட்ட தனது பெயரை மீண்டும் கட்டியெழுப்பி மீண்டும் ஆட்சியை கைப்பற்றத் திட்டமிடுகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கோத்தாபய ராஜபக்சவின் சகா அரசியலில் ஈடுபடுவது தொடர்பான அறிவித்தலை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார். அவரால் வாங்கப்பட்ட மவ்பிம ஜனதா கட்சிக்கு கோத்தாபய ஆதரவளிக்கின்றார் என்று தெரியவருகின்றது. கட்சியின் புதிய தலைவராக ஜெயவீர பொறுப்பேற்ற பின்னர் கட்சியின் யாப்பில் மாற்றங்கள் சேர்க்கப்பட்டு புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது. கட்சி தற்போது புதிய உறுப்பினர்களை இணைத்துவருகின்றது.

'வியத்மக' போன்று கல்வி கற்றவர்களைச் சேர்ப்பதற்கு கட்சி தீர்மானித்துள்ளது.

நாடு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகிவரும் நிலையில் ஜெயவீர தலைமையிலான புதிய கட்சிக்கு கோத்தாபய தனது ஆதரவை வழங்குவார் என தெரியவருகின்றது. (ஏ-இ)

# ரணில் ஜனாதிபதி; சஜித் பிரதமர்

## ஹரின் எம்.பி. ஆதரவு



ரணிலும், சஜித்தும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அந்தவகையில் 'ரணில் ஜனாதிபதி, சஜித் பிரதமர்' என்ற யோசனையை ஆதரிக்கின்றேன் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- ரணிலும், சஜித்தும் காலைவாரிக் கொள்ளாமல் இணைந்து செயற்படுவதையே நானும் விரும்புகின்றேன். இவர்களை இணைப்பதற்காகத்தான் 2014ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகி, ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டேன், சஜித், ரணில் ஒரு மேடையில் ஏற வேண்டும் என்பதே ஒரே நிபந்தனையாக இருந்தது. அதன்படி இருவரும் இணைந்தனர். ஒன்றாக மேடையேறினர். அதன்பின்னரே அரசியலில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

2019 இல் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு பெரும்பாடுபட்டவன் நான், எனவே, இவர்கள் இணைந்து செயற்பட்டால் நல்லது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க கட்சி வேட்பாளராக அல்லாமல், பொது வேலைத் திட்டத்துடனேயே வருவார் - என்றார். (ஏ-44)

# பௌத்த கொடியைப் பயன்படுத்தும் உரிமை ராஜபக்சக்களுக்கு இல்லை

## சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, செப்.13

குருந்தூர்மலை விவகாரத்தில் கை வைத்து நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தோற்றுவிப்பதை ராஜபக்சர்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

தமிழ்த் தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சுமுகமாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும். பௌத்த கொடியை பயன்படுத்த ராஜபக்சக்களுக்கு எந்தத் தார்மீக உரிமை ஏதும் கிடையாது.

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

ராஜபக்சக்களுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும்போது அவர்களது சகாக்கள், 30 வருட கால போரை முடிவுக்குக் கொண்டு வந்ததாலேயே ராஜபக்சக்கள் சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள் என்று கூறுகின்றார்கள். சிங்கள - பௌத்த தலைவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

ராஜபக்சக்கள் தலையிட்டால் மாத்திரமே குருந்தூர்மலை விவகாரத்துக்கு ஒரு தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள். குருந்தூர்மலை விவகாரத்தில் கை வைத்து நாட்டில் மீண்டும் இனவாதத்தைத் தோற்றுவிப்பதை ராஜபக்சக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பாக தமிழ்த் தலைமைகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சுமுகமான தீர்வுகாண வேண்டும். பௌத்த கொடியைப் பயன்படுத்த ராஜபக்சக்களுக்குத் தார்மீக உரிமை கிடையாது.

வங்குரோத்து நிலையடைந்துள்ள நாட்டை மீட்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எதிர் வரும் நாள்களில் முன்னெடுப்போம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன - என்றார். (ஏ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதன் பொய்கை



"அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை." -வள்ளுவர்

ச.தனுஷ்கா,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
ஊடகக்கற்கைகள் துறை

# கடலில் கலந்த கதிரியக்க நீர்!

ஜப்பானில் 2011ஆம் ஆண்டு பெரும் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக அதே ஆண்டு மார்ச் 11ஆம் திகதி சுனாமிப் பேரலை ஜப்பானைக் கடுமையாகத் தாக்கியது. இதில் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டதுடன் உயிரிழந்தனர். அந்தக் காலப்பகுதியில் பெரும் பாதிப்பை சந்தித்தது. புகுஷிமா பகுதியில் அமைந்திருக்கக் கூடிய மிகப்பெரியதும். உலகத்திலேயே பாதுகாப்பானதுமாகக் கருதப்பட்ட புகுஷிமா அணுஉலை.

சுனாமியின்போது இந்த அணு உலையில் கடல்நீர் பெருமளவு ஊடுருவியது. அணு மின்நிலையத்தின் தொழிற்பாட்டுக்குரிய பல மின்சார இயந்திரங்கள் செயலற்றமையால் உலைகளை குளிர்விக்கக்கூடிய சாதனங்கள் அனைத்தும் செயலிழந்தன. இதனால் அணுஉலையில் வெப்பம் அதிகரித்தது. அதன் விளைவால் ஆறு யூனிட்களில் மூன்று யூனிட்கள் முற்றிலும் சேதமாகியது. அணு உலையை சுற்றியுள்ள பகுதிகளை கதிர்வீச்சு தாக்கியது. காற்றில் பரவக்கூடிய கதிர்வீச்சினைத் தடுப்பதற்கும் வெப்பத்தைக் குறைப்பதற்கும் இலட்சக்கணக்கான லீற்றர் நீரை ஜப்பான் அரசு பயன்படுத்தியது. இவ்விபத்து நிகழ்ந்து 12 ஆண்டுகள் கழிந்தும்கூட அணுஉலையில் கதிர்வீச்சின் தாக்கம் உள்ளது என்று கூறப்படுகிறது. இதனால் புகுஷிமா அணு உலையில் இருக்கக்கூடிய அணுக்கழிவுகளை பாதுகாப்பாக அகற்றியதன் பின்னர் இவ்வணு உலையை முழுமையாக செயலிழக்கக்கூடிய பணிகளில் ஜப்பான் தீவிரமாக இறங்கியிருக்கின்றது.

புகுஷிமா அணு உலையிலிருந்து சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் ஜப்பான் ஓகஸ்ட் 24ஆம் திகதி திறந்து விட்டுள்ளது. இதனை ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பு ஏற்றுக்கொண்டாலும் அந்தக்கழிவு நீரில் அகற்றப்படாத கதிரியக்கம் எஞ்சியிருக்குமோ என்ற அச்சம் மக்களிடம் காணப்படுகிறது. இதையடுத்து ஜப்பானிலிருந்து மீன்களை இறக்குமதி செய்ய சீனாவும் தென்கொரியாவும் தடை விதித்துள்ளன.

### ஜப்பானின் கருத்து

சேதமடைந்த புகுஷிமா அணுஉலையின் கதிர்வீச்சினை குறைப்பதற்கு இதுவரைக்கும் 13 லட்சம் லீற்றருக்கு அதிகமான நீர் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக பயன்படுத்தப்பட்ட நீரானது கதிர்வீச்சுடன் கலந்து கழிவு நீராக மாறியது. இக்கழிவு நீரானது சுத்திகரிக்கப்பட்டு அணு உலைக்கு அருகிலுள்ள தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த ஆண்டு கழிவு நீர் தேக்கி வைக்கப்பட்டுள்ள அத்தொட்டிகள் நிரம்பக்கூடிய நிலையில் உள்ளதாக டெப்கோ நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தற்போது புகுஷிமா அணுஉலையின் கழிவுகள் நிறைந்த சுமார் பல்லாயிரம் தொன் கழிவு நீர் முற்றிலுமாக சுத்திகரிக்கப்பட்டு ஆயிரத்துக்கும் அதிகமான தொட்டிகளில் பாதுகாப்பாக சேகரிக்கப்பட்டுள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் பல சுற்றுகள் சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை இனியும் அப்படியே சேமித்து வைத்திருப்பது சரியான தீர்வாகாது என்று வாதிடும் ஜப்பான், அணுசக்தி நிலையத்தில் சேகரிக்கப்பட்டுள்ள ஒரு மில்லியன் தொன் அளவான கழிவு நீரைப் பாதுகாப்பான முறையில் எதிர்வரும் 30 வருட காலப்பகுதியில் சமுத்திரத்தில் பகுதி பகுதியாக விடுவிக்க உள்ளது.

ஜப்பானின் வாதத்தை பல அறிவியலாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். ஐ.நா.அணுசக்தி பாதுகாப்பு அமைப்பும் ஜப்பானின் இந்தத்திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இது சர்வதேச தரத்துக்கு உட்பட்டதும், சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் மிகச் சிறியதாகவே அமையும் என அவ்வமைப்பு கூறியுள்ளது.

### பிற நாடுகள் எதிர்ப்பது ஏன்?

ஜப்பானின் புகுஷிமா திட்டத்துக்கு சீனா, தென்கொரியா, ஹொங்கொங் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றன. புகுஷிமா அணுஉலை கழிவு நீரை சுத்திகரித்தாலும் அதில் உள்ள ட்ரிட்டியம் மற்றும் கார்பன் 14 ஆகிய கதிரியக்க மூலக்கூறுகள் தற்போது ஆபத்தான அளவுக்கு இருப்பதாகவும் அவற்றை முழுவதுமாக அகற்றக்கூடிய தொழில்நுட்பமானது உலகில் எந்த நாட்டிலும் கிடையாது. எனவே ஜப்பானின் மதிப்பீடுகள் நம்பத்தகுந்தவை அல்ல என்பதே சீனா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகளின் வாதம். ஜப்பானிலிருந்து கடல் உணவுகளை அதிக அளவில் கொள்வனவு செய்யும் நாடான சீனா, இறக்குமதி அனைத்தையும் முடக்கியுள்ளதாக தெரிவித்துள்ளது. சீனாவால் ஜப்பானிய கடல் உணவுகளுக்கு விதிக்கப்பட்ட தடையானது ஜப்பானின் பொருளாதாரத்தை பெரிதும் பாதிப்பதாக உள்ளதை அந்நாடு ஏற்றுக்கொண்டுள்ளது.

### ஜப்பான் மீனவர்கள் மற்றும் மக்களது எதிர்ப்பு

புகுஷிமா அணுஉலை கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் திறந்து விடும் ஜப்பான் அரசின் திட்டத்தை அந்நாட்டு மக்களே ஆதரிக்கவில்லை. சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில் ஜப்பானில் சரிபாதி மக்களே அரசின் திட்டத்தை ஆதரிக்கின்றனர். ஜப்பான் மீனவர்கள் மற்றும் கடலோரப் பகுதிகளில் வாழும் மக்களிடையே அரசின் திட்டத்துக்கு எதிர்ப்பு அதிகமாக உள்ளது.

இந்தத் திட்டத்தால் மக்கள் கடல் உணவை புறக்கணிக்கக்கூடும் என்று அஞ்சுகின்றனர். இதனால் தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் சீர்குலைந்து விடும் என்று உள்ளூர் மீனவர்கள் கவலைப்படுகின்றனர்.


'அணுக்கழிவு நீரை பசுபிக் கடலில் கலப்பதை விட சிறந்த வேறு பல தீர்வுகள் இருக்கக்கூடும்.

ஆனால் அவர்கள் இந்த நீரை கடலில் திறந்து விட முடிவு செய்துள்ளனர். இதனால் உலகிற்கும் பிரச்சினையே, இதனை ஏற்றுக் கொள்ளவே முடியாது' என்று ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய ஜப்பானிய மீனவர்கள் தெரிவித்தனர்.

### மாற்றுபாய நடவடிக்கைகள்

2021ஆம் ஆண்டு இந்தத் திட்டத்தை முன்மொழியும்போது பல எதிர்ப்புகள் கிளம்பியதால் இதுபோன்ற எதிர்வினைகள் வரலாம் என்பதை எதிர்பார்த்த ஜப்பான் அரசு, மீனவர்களைக் காக்க மாற்றுத் திட்டத்தை ஏற்கனவே வகுத்துள்ளது. புகுஷிமா அணுஉலை கழிவு நீரை பசுபிக் பெருங்கடலில் திறந்து விட்ட பின்னர், ஜப்பான் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பதில் சிரமம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அரசே அவற்றைக் கொள்வனவு செய்வதாகவும், புகுஷிமா மற்றும் ஜப்பானின் பிற பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களை கொள்வனவு செய்ய புதிய நிதிக்கொள்கை உருவாக்கப்படும் என்றும் அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.


இந்தத் திட்டம் ஆசியப் பிராந்தியத்தில் ஓர் அரசியல், பொருளாதார மாற்றத்தை, பதற்றத்தை அடுத்த சில வாரங்களில் ஏற்படுத்தும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகோளமயமாதல் காரணமாக

# கலாசாரம் அழிகின்றதா? ஊக்குவிக்கப்படுகிறதா?



ராஜலிங்கம் மனோஜ்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கலாசாரப் பண்பாடு என்பது பொதுவாக மனித செயற்பாட்டுக் கோலங்களையும் அத்தகைய செயற்பாடுகளுக்குச் சிறப்புத்தன்மைகளையும் எடுத்துக்காட்டும் பழக்கவழக்கங்களைக் குறிக்கின்றது. மொழி, உணவு, இசை, சமய நம்பிக்கை, தொழில்சார் தெரிவு, இசைக்கருவிகள் போன்றவையும் பண்பாட்டையே எடுத்துக்காட்டுகின்றன. கலாசாரப் பண்பாடானது தனிமனிதனின் வாழ்வுடன் ஆழமாகத் தொடர்புபட்ட ஒரு விடயமாகும். இதனால் சமூகவியலின்படி கலாசாரப் பண்பாடு என்பது 'வாழ்க்கை முறை' என்பதாகும். ஒவ்வொரு மனித சமுதாயத்துக்கும் ஒரு கலாசாரப் பண்பாடு உண்டு. அது அந்த சமுதாயத்தில் வாழ்கின்ற பெரும்பான்மை மக்களின் நடத்தைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துகின்றது. கற்காலம் முதல் தற்காலம் வரையான கால ஓட்டத்தில் நாகரிகம் வளரவளர பண்பாடும் மலர்ச்சி பெற்றுள்ளது.

பூகோள மயமாக்கம் என்பது தொலைத்தொடர்பு, தகவல்தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய துறைகளின் முன்னேற்றங்களால் உந்தப்பட்டு சமூகங்களுக்கு இடையில் அதிகரிக்கும் தொடர்பினையும் அதனால் ஏற்பட்டுவரும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழும் நிலையைக் குறிக்கும் பதமாகும். அல்லது உலகமானது சுருங்கி ஒரு கிராமமாக செயற்படுவதைக் குறிக்கின்றது. உலகமானது ஒரு சிறிய இடமாக மாறிக் கொண்டிருக்கிறது. இது உலகம் அளவில் சுருங்குகின்றது என்பதல்ல மாறாக உலகமக்கள் பல தூரம் கடந்து எல்லைகள் கடந்து பல்வேறு விடயங்களைக் குறித்து ஒருவருக்கொருவர் நெருக்கமடைகிறார்கள் என்பதாகும்.

இது பொருளாதாரம் அரசியல், பாதுகாப்பு, சூழல், சுகாதாரம், சமூகம், கலாசாரம் மற்றும் பண்பாடு என்பவற்றின் பிணைப்பினூடாக உலகமக்கள் நெருக்கமாவதுடன் ஒருவரில் ஒருவர் தங்கி வாழும் நிலையும் அதிகரித்துள்ளது. இவ் பூகோளமயமாதல் அல்லது உலகமயமாக்கலானது ஏனைய எல்லாத்துறைகளிலும் செல்வாக்குச் செலுத்தியதைப் போலக் கலாசாரப் பண்பாட்டுத் துறையிலும் தனது தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. பூகோளமயமாக்கலானது உலகமக்கள் அனைவரையும் ஒரே பண்பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்கின்றது. இதனால் கலாசாரம் பண்பாடு பரிமாறிக் கொள்ளப்பட்டாலும் ஒரே வகையான கலாசாரப் பண்பாட்டை மக்கள் பின்பற்ற முற்படும்போது ஏனைய சமுதாய மக்களின் கலாசாரமும் பண்பாடும் அழிந்து போகக்கூடும். கலாசாரமும் பண்பாடும் காலம் கடந்தும் வாழும். ஆனால் அவற்றின் பல்வகைத்தன்மை அழிந்து ஏதாவது ஒன்று மட்டுமே காணப்படும். உதாரணமாக, திருமண முறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், மொழிப் பயன்பாடு, சடங்கு முறைகள் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.



இவ்வாறு ஓர் இனத்தவரின் கலாசாரப்பண்பாடு மற்றவரிடையே பரவி உலகறியப்பட்டது நன்மையாகக் காணப்பட்டாலும், அதன் குறைகளை மக்கள் சுட்டிக்காட்ட முற்பட்டபோது அது பிரச்சினையாக மாற்றம் அடைய ஆரம்பித்தது. இது ஒருவரையொருவர் தங்கி வாழும் நிலையில் பேதத்தை ஏற்படுத்துகின்றது. என்னதான் பலர் பல்கலாசாரப்; பண்பாட்டை விரும்பினாலும் சிலர் தங்களுடையது தான் மேன்மையானது சிறப்பானது என தான்தோற்றித்தனமாகச் செயற்படுகின்றனர். மேலும் பல்கலாசாரம் மாறி அனைவரும் ஒரே கலாசாரத்தை பின்பற்றினால் அவர்களுடைய பண்பாடுகள் அழிந்து அவர்களின் அடையாளம் அழியும் என மக்கள் அச்சப்படுகின்றனர். இதன் பின்னால் அரசியல் மற்றும் பொருளாதார சூழ்ச்சிகளும் செயற்படுகின்றன. என்னதான் நாகரிகம் பரவலாக விநியோகிக்கப்பட்டு பலராலும் பார்க்கப்பட்டாலும் சிலரே அதனை ஏற்றுக்கொள்கின்றனர். இது உலகமயமாக்கலில் உள்ள அறிவின்மை ஆகும். உலகமயமாக்கல் அவர்களின் அடையாளத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாக கருதுவதாலும் நம்புவதாலும் கலாசாரப்பண்பாடு அழிவடைகின்றதா அல்லது மேம்பாடு அடைகிறதா என்பது விவாதத்துக்கும் கேள்விக்கும் உரிய விடயமாகக் காணப்படுகின்றது.

'எண்ணம் போல் வாழ்வு' என்பார்கள். எண்ணம் நன்மையானதாக அமையும் போது மக்களின் வாழ்வான, கலாசாரப் பண்பாடானது மேன்மையடையும். அவ் எண்ணம் தீமையானதாக சுயநலமாக அமையும் போது கலாசாரப்பண்பாடு அழிவடையும். இதனை அரிஸ்டோட்டில் அரசியலைக் கொண்டு கணித்துள்ளார். அரசுகள் ஒன்றில் இருந்து ஒன்று வேறுபட இந்தக் கலாசாரப்பண்பாடுகளும் ஒரு காரணமாக அமைகின்றன. இது ஒன்றிணையும் போது நாடுகளிடையேயான மோதல்கூட ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. பணம், பதவி மற்றும் அதிகார ரீதியில் நாடுகள் அடிமையாகக் கூடும். ஆகவே உலகமயமாக்கல் காரணமாகக் கலாசாரப் பண்பாடானது நன்மை மற்றும் தீமை இவை இரண்டையும் உள்ளடக்கியுள்ளது. ஆனால், உண்மையில் உலகமயமாக்கல் காரணமாகக் கலாசாரப்பண்பாடு அழிவடையவும் இல்லை. மேம்பாடடையவும் இல்லை அது ஒரு நெகிழ்ச்சித்தன்மையுடையதாக மாற்றம் பெற்றுள்ளது. ■



# மாற்றுத்திறனாளி மாணவர்களில் சமவயதுக் குழுக்களின் தாக்கம்

நிசார் பாத்திமா நிஸ்மினா
கல்வியியல் சிறப்புக் கற்கை மாணவி
கல்வி மற்றும் பிள்ளை நலத்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்


தனியாள்களுக்கும் பண்பாட்டுச் சூழலுக்குமிடையே நிலவும் தொடர்பு பற்றிய கல்வியே கல்விச் சமூகமயமாக்கலாகும். இங்கு பண்பாட்டுச் சூழலானது தனியாள் மீது செலுத்தும் செல்வாக்கினை ஆராய்வதுடன், அச்சூழலை மாற்றியமைக்கும் வழிமுறையாகவும் அமைகின்றது. கல்விச் சமூகவியலில் சமவயதுக் குழுக்களானவர்கள் மிக முக்கியமானவர்களாவார்கள். இவர்கள் சமூகமயமாக்கல் முகவர்களாகத் திகழ்வதன் வாயிலாக கல்வி சமூகமயமாக்கப்படுவதில் இன்றியமையாதவர்களாக உள்ளனர். 'கல்விச் சமூகவியல்' இன்றைய காலப்பகுதியில் முக்கியத்துவப்படுத்தப்படும் ஒரு துறையாகத் திகழ்கின்றபோதிலும் 19ஆம் நூற்றாண்டிலேயே கல்வியில் ஏற்பட்ட சில மாற்றங்களின் வாயிலாக இது முன்னிலைப்படுத்தப்பட்டு, 20ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் கல்வித் துறையோடு இணைந்த ஒரு கோட்பாடாகக் காணப்படுகின்றது.

சமூகமயமாக்கல் முகவர்கள் என்ற வகையில் சமவயதுக் குழுக்களானவர்கள் கல்விச் சமூகமயமாக்கலுக்குப் பெரும் பங்களிப்பைச் செய்கின்றனர். அவை சாதகமானதாகவும் இருக்கலாம், சில வேளைகளில் பாதகத் தன்மைகளையும் வெளிப்படுத்தலாம். விசேட தேவைகளை உடைய மாணவர்கள் எனும்போது கேட்டல் குறைபாடுடையவர்கள், பார்வைக்குறைபாடுடையவர்கள், கற்றல் இயலாமையுடையவர்கள், உடலியக்கக் குறைபாடுடையவர்கள், பேச்சு மற்றும் மொழி குறைபாடுடையவர்கள், ஓட்டிசம், மீத்திறன் கொண்டவர்கள் என்பவர்கள் உள்ளடங்குகின்றார்கள். கல்வி நிறுவனங்களைப் பொறுத்தவரைக்கும் இவர்களின் கல்வி சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களானவர்கள் குடும்பம், பாடசாலை, உயர்கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் எனப் பல்வேறு காலப்பகுதிகளிலும் பெரும் பங்களிப்புக்களைச் செய்துவருகின்றனர்.

இவ்வாறான மாணவர்கள் உடலியல் ரீதியாக கொண்டுள்ள இயலாமைகளினை சமவயதுக் குழுவினரின் ஒற்றுமை உணர்வுகளின் வாயிலாகக் குறைத்துக்கொள்வதுடன், உளரீதியாக ஆறுதல்களையும் இக்குழுக்களால் பெற்று வருகின்றனர். 'நிக் வாய்சிக்' என்ற அவுஸ்திரேலிய நபர் சிறுவயதிலேயே கொக்கா மதியா எனும் நோயால் பாதிக்கப்பட்டார். இருந்தும் இன்று இவர் சிறந்த பேச்சாளராகவும், ஒரு தன்னியக்க நிறுவனத்தின் அதிபதியாகவும் திகழ்வதற்கான காரணிகளில் தனது கல்விச் சமூகமயமாக்கலில் நண்பர் குழாமின் பங்களிப்புப் பிரதானமானது என்று ஒப்புக்கொண்டுள்ளார். மேலும், கல்விச் சமூகமயமாக்கலில் 'திறன் வெளிப்பாடுகளும்' சமவயதுக் குழுக்களின் வாயிலாக விசேட தேவைகளை உடைய மாணவர்களுக்கு வெளிப்படுகின்றது. விசேட தேவைகளை உடைய மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவு மட்டங்களை எடுத்துக் கொண்டால் அவர்களை கலை, கலாசார நிகழ்வுகளுக்கு அழைத்துச் செல்லுதல், அவற்றில் பங்குகொள்ளச் செய்தல் எனப் பல்வேறு செயற்பாடுகளில் சமவயதுக்குழுவினர் உதவுகின்றனர். கல்விச் சமூகவியல் சூழலில் தனியாள்களுக்கும், பண்பாட்டுச் சூழலுக்குமிடையே தொடர்பு நிலையை ஏற்படுத்தும் பெரும் பணியை சமவயதுக்குழுக்கள் செய்கின்றன. அத்துடன், பல்லின கலாசாரப் பண்புகளை அறிந்து கொள்வதற்கும், விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கு இச்சமவயதுக் குழுக்கள் உதவுகின்றன. மன அழுத்தத்தை குறைத்துக் கொள்வதற்கும், அதனூடாகத் தங்கள் திறன்களை வெளிப்படுத்திக் கொள்வதற்கும், விசேட தேவையுடைய மாணவர்களின் உயர் அடைவுகளுக்கும், கல்வி சமூகமயமாக்கலின் ஒருபகுதியாக இந்த சமவயதுக் குழுக்கள் உதவுகின்றன. இவையெல்லாம் ஒருபுறம் இருக்கையில், கல்வி சமூகமயமாக்கலில் சமவயதுக் குழுக்களின் பங்களிப்பானது விசேட தேவைகளை உடைய மாணவர்களுக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கவே செய்கின்றது. சிறப்புத் தேவையுடைய மாணவர்களை வகுப்பறைக் கட்டமைப்பில் இருந்து ஒதுக்கிவைத்தல் இதில் முக்கியமானதும் ஆபத்தானதுமான அம்சமாகவே அமைந்திருக்கின்றது. உடல் ரீதியாக காயங்களுக்கு உட்படுத்துதல் என்பதும் விசேட தேவைசார் மாணவர்களை எதிர்மறையான விளைவுக்கோ அல்லது முடிவுகளை எடுப்பதற்கோ இட்டுச்செல்லும். கல்விக் கட்டமைப்பு அனைத்துவிதமானவர்களையும் உள்ளடக்கி வளம்பெற வேண்டுமாயின் பலம்பெற வேண்டுமாயின், கற்றல் கற்பித்தல், சமூக மனவெழுச்சி ரீதியான பல்வேறு மாற்றங்களுக்கும் சமவயதுக் குழுக்களானவர்கள் பெரியளவில் பங்களிப்புச் செய்து உதவவேண்டும். இது பல்லின கலாசார நாடுகளுக்கு அத்தியாவசியமான ஜனநாயகத் தேவையாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சங்க காலத்தில் வணிக நடைமுறைகள் எவ்வாறிருந்தன. அக்காலத்தில் தமிழர்கள் எவ்வாறான வணிகக் கலாசாரத்தைப் பின்பற்றினார்கள் என்பன தொடர்பில் இந்தக் கட்டுரை விரிவாக ஆராய்ந்து எண்பிக்கின்றது. கடந்த வாரத்தின் தொடர்ச்சி இவ்வாரம் பதிவாகின்றது)





பேராசிரியர்
சிவனேசன் சிவானந்த மூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# சங்க இலக்கியங்களில் வணிகமும் வணிக நடைமுறைகளும்

தமிழர் பண்பாட்டினைப் புரிதல் ஓர் இனத்தின் அல்லது மக்கள் தொகுதியின் பண்பாடு எப்போதும் தனித்துவமானதாய் அமைந்திருக்கும் என்பதற்கு தமிழர் பண்பாடு மட்டும் விதி விலக்கல்ல. இற்றைக்கு 2ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியமானது தமிழ் மொழிக்கான இலக்கணத்தை செவ்வன இயம்புகிறது. தமிழர் பண்பாட்டின் தோற்றத்தின் காலம் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது தெளிவானது.
தமிழர் பண்பாடு என்பது தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவருக்கும் பொதுவானதாகக் காணப்படுகின்றது. தமிழரின் பண்பாட்டு அம்சங்களில் மிக உயரியதும் மனித வாழ்வோடு இணைந்ததும், இசைந்ததுமானதாக விருந்தோம்பல் பண்பாடு காணப்படுகின்றது. பண்டைய தமிழ் இலக்கியங்கள் விருந்தோம்பல்களையும் விருந்தோம்பல் சிறப்பினையும் குறிப்பிடத் தவறவில்லை. தமிழ் வளர்ச்சிப் போக்கில் வந்த சிவகசிந்தாமணியில்:

**'ஒப்புடன் முகம் மலர்ந்தே உபசாரித்து உண்மைபேசி**
**உப்பில்லாக் கூழ் இட்டாலும் உண்பதே அமிர்தமாகும்**
**முப்படியொடு பால அன்னம் முகம் கருத்து இடுவதாயின்**
**கப்பில பசியினோடு கடும் பசி ஆகுந்தானே'.**

விருந்தோம்பலானது முக மலர்ச்சியுடனும் மெல்லிய புன்னகையுடனும் உளப்பூர்வமாக அதாவது அகமும் உதடும் ஒருமித்து வரவேற்று விருந்து பரிமாற வேண்டும். அவ்வாறு நிகழாத சந்தர்பத்தில் முகர்ந்து பார்க்கையில் வாடிவிடும் அனிச்ச மலரைப் போல் விருந்து கெட்டுவிடும். விருந்தோம்பல் என்பது தமிழர்களினால் போற்றி கொண்டாடப்படுகின்ற ஒரு கலையாகும். பண்டைத் தமிழன் வாழ்வியலில் விருந்தோம்பலானது ஊடல் கொண்டிருந்த கணவன் மனைவிக்கு இடையே சுமூகமான உறவுவினை ஏற்படுத்திக் கொள்ள உதவும் ஒரு செயல்பாடாகவும் காணப்படுகின்றது. பரிபாடலில் இந்த உயரிய மன் உயிர் ஓம்பும் விழுமியம் அழகாகக் கூறப்பட்டுள்ளது:

**மலிவடை உள்ளத்தான் வந்துசெய் வேள்வியுள்,**
**பல்மணம் மன்னு பின்னிருங் கூந்தலர்,**
**கன்னிமை கனிந்த காலத் தார், நின்**
**கொடியேற்று வாரணம் கொள்கவழ மிச்சில்**
(பரி:19, 89 91)

இந்தப்பாடலின் வழியாக கன்னிப் பெண்கள் தமக்கு நல்வாழ்கைத் துணையாளன் கிடைக்க வேண்டும் என கடவுளிடம் வேண்டி கடவுளுக்கு காணிக்கையாக படைத்தது பின் அந்தப் படையலை கோவில் யானைக்கு மீளப் படையல்செய்து மீதியினை சங்க காலத்து பாவையர்கள் உண்பர் என பரிபாடல் கூறுகின்றது.
தமிழன் என்றுமே அகன்ற விசாலமான சிந்தனை ஓட்டத்துடன் வாழ்ந்தான் என்பதனை தொன்மை இலக்கியங்களின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளாம்.
சம...ால உலகில் பேசு பொருளாக மாறியுள்ள உலக மயமாக்கல் என்ற கோட்பாட்டினை பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த கணியன் பூங்குன்றனார் எடுத்தியம்பியுள்ளார்:

**யாதும் ஊரே யாவரும் கேளிர்;**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா** (புறம்: 192,12)

பரந்த பாரில் உள்ள எல்லாம் யாவருக்கும் பொதுவானது. இடம் எதுவாயினும் எல்லோருக்கும் உரியதே. எவராயினும் எல்லோரும் எம் உறவினரே. நன்மையும் தீமையும் பிறரினால் ஏற்படுத்தப்படுவது இல்லை. ஒவ்வொருவரது செயல்களின் விளைவாகத்தான் நன்மையும் தீமையும் ஏற்படுகின்றது என்கிற உயரிய தமிழ் தத்துவத்தை உலகிற்கு வெளிப்படுத்துகிறது.
மேலும் இந்தப்பாடல் தத்துவ ரீதியாக தொன்மைத் தமிழனின் தாராள சிந்தனை ஓட்டத்தினையும் இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று எல்லோரையும் சமமாக நோக்குகின்ற தமிழர் வாழ்வியல் முறையினையும் அறிந்துகொள்ள முடிகின்றது. ஆண்டவன் முதல் ஆண்டி வரை சமமாக நோக்கி அணுகுகின்ற முறை தமிழர்களிடம் இருந்தது. சகிப்புத்தன்மை, எதனையும் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவு எடுக்கும் இயல்பு என்பன ஆதித் தமிழனிடம் காணப்பெற்ற உயர்ந்த பண்புகளாகும். அச்சமயம் புதிய நல்ல பயன் தரும் சிந்தனைகளினை ஏற்றுக்கொள்ளுதல், அதன்படி நடத்தல், நடைமுறைக்கு ஒவ்வாத சிந்தனைகளிலிருந்து வெளியே வருதல் தமிழரின் அற்புதமான குண இயல்புகள் ஆகும்.
சமகாலத்தில் உலகியல் மாறுதல்களுக்கு ஏற்ப புதிய எண்ணங்களினை தன்பால் உள்வாங்கி பொருத்தமான கருத்தியலுக்கும், எண்ண ஓட்டங்களுக்கும் ஊடாக பல் பரிமாணம் கொண்டு வளர்ச்சியடைந்துள்ள நவீன வர்த்தக, பொருளாதார, சமூகக் கட்டமைப்பினைக் கொண்டதும் அடிப்படைப் பண்பாட்டில் மாறுதல்களின்றி முன்னெடுக்கப்படும் தமிழர் வாழ்வியலை அவதானிக்கலாம்.
பண்டைத் தமிழன் கருத்தினை அல்லது எண்ணங்களினை முன்வைப்பவனது மூலம்குறித்து முக்கியத்துவம் கொடுக்காது, மாறாக அவனது கருத்துக்களுக்கும், எண்ணங்களின் உருவாக்கங்களுக்கும் மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பவனாய் காணப்பட்டான். இதனைச் சான்றுப்படுத்த தொன்மை கால தமிழர் வரலாற்று நிகழ்வுகளிலிருந்து சில எடுத்துக் காட்டுகளை இங்கு குறிப்பிடலாம்.
ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சீவகசிந்தாமணி, நரிவிருத்தம் என்கிற நூல்களினை எழுதியவரான திருத்தக்க தேவரும், சிலப்பதிகாரம் என்னும் உன்னத காவியத்தை வடித்த இளங்கோ அடிகளும் அடிப்படையில் சமணர்கள். பொதுவாக சமண மதத்தவர்கள் மதக் கொள்கைகளின் நிமித்தம். அவர்கள் காவியங்களின் மீதும், கலைகள் மீதும் நாட்டமற்றவர்களாக இருந்த போதும். தமிழர் கலைகளினைக் குறித்து தமது படைப்புகளில் ஆழமாக விபரித்துள்ளனர். அது போன்று ஈழ வள நாட்டில் இனிய தமிழுக்கும், இந்துசமயத்துக்கும் அரிய பல பங்களிப்புகளினைச் செய்த ஆறுமுகநாவர் விவிலியத்தை தமிழ் மொழியில் மொழி பெயர்த்தார். இவை மூலம் தமிழரின் சகிப்புத்தன்மையையும், அண்டம் கடந்த மதம் கடந்த பூகோளமயமான பரந்த மனப்பான்மையினைக் கண்டு கொள்ள முடிகிறது.
தமிழர் பண்பாட்டில், திறமையினையும், திறமைசாலிகளையும் அங்கீகரித்து அரவணைத்து. அவர்களின் பங்களிப்பு பெறுமதியினை கனம்பண்ணி கொண்டாடுவதில் தமிழ் பண்பாட்டுக்கு நிகராக எந்த பண்பாட்டிலும் இடம்பெற்றிருக்கவில்லை. இதுதான் தமிழ்ப் பண்பாட்டின் மகிமையும் மாண்புமாகும்.



## 'குடும்பம் ஒரு கதம்பம்'

ஈழத்து எழுத்தாளரும், சமூக சிந்தனையாளரும், உளவள ஆலோசகருமான கோகிலா மகேந்திரன் எழுதிய 'குடும்பம் ஒரு கதம்பம்' நூல் வெளியீடு கடந்த 12ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி, அல்வாயில் அமைந்துள்ள கலையகத்தில் இடம்பெற்றது.
கலாநிதி தி.செல்வமனோகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறப்புரையை உறவுகள் எனும் தலைப்பில் நூலாசிரியர் சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து வாசகர்களின் பல்வேறு கேள்விகளுக்கும் நூலாசிரியர் பதிலளித்தார்.
அதனைத் தொடர்ந்து நூல் தொடர்பான கருத்துரைகளை யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர்களான அஜந்தகுமார், இராஜேஷ்கண்ணன் ஆகியோரும், நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் கந்தர்மடம் அ.அஜந்தனும், ஏற்புரையை நூலாசிரியரும், இறுதியாக நன்றியுரையை நிகழ்வின் ஏற்பாட்டாளரும், ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியர் பரணீதரன் ஆகியோர் ஆற்றினர்.
நிகழ்வில் கல்வியியலாளர்கள், வாசகர்கள், ஊரவர்கள், நண்பர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இந்நூலில் வெளியான திருமணம், குடும்பம், பெற்றோரியம் சார்ந்த உளவியல் மையக் கட்டுரைகள் ஜீவநதி இதழில் தொடராக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
- கஜிந்தன் -

## 'மலையகத் தமிழ் மக்களுடைய 200 வருட வரலாறு'

கலாபூஷணம் இரா.சுப்பிரமணியம் எழுதிய "மலையகத் தமிழ் மக்களுடைய 200வருட வரலாறு" எனும் நூல் அறிமுகம் கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி பெண்விழா மண்டபத்தில் நடைபெற்றது.
விருந்தினர் வரவேற்புடன் தொடங்கிய மேற்படி நிகழ்வில், தொடர்ந்து மங்கலவிளக்கேற்றல் இடம்பெற்று, தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதையடுத்து, நூல் அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.



அந்தவகையில் நூலினுடைய முதற்பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஊடக நிறுவனமொன்றின் பணிப்பாளரான கந்தையா பாஸ்கரனிடம் கையளித்து நூல் அறிமுகத்தை ஆரம்பித்து வைத்தார்.
அதனைத் தொடர்ந்து நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஏனையவர்களும் குறித்த நூலினைப் பெற்றுக்கொண்டனர்.
இந்த நிகழ்வில் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.
மேலும் நிகழ்வில் விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ஆ.ஜோன்சன் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.
- சரவணன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து நூல்களின் வெளியீட்டு விழா




சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரியநிலா) எழுதிய 5 நூல்களின் வெளியீட்டு விழா கொடிகாமத்தில் அண்மையில் இடம் பெற்றது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவஅதிகாரி மருத்துவக்கலாநிதி எஸ்.சுதோக்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர மருத்துவர் ஆ.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சி..சிவசுதன், உசன் பவுண்டேசன் உபதலைவர் மருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன், உலக வள்ளுவர் வழி இணையப் பள்ளியின் இயக்குநர் சிவஜோதி ஜெயக்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் 'உயிர்ப்பு' எனப்படுகின்ற தாய்சேய் நலம் தொடர்பான சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வினையும், மருத்துவர் க.சிவசுதன் 'விழிப்பு' எனப்படுகின்ற தொற்றா நோய்களைத் தடுப்பதற்கான சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வினையும், மருத்துவர் சி.சுதோக்குமார் 'காப்பு' எனப்படுகின்ற உணவுப் பாதுகாப்பு சம்பந்தமான சுகாதார மேம்பாட்டு நூலின் திறனாய்வினையும், மருத்துவர் ஐ.ஜெபநாமகணேசன் 'திறப்பு' எனப்படுகின்ற நேர்வயமான சிந்தனைகளைக் கட்டியெழுப்புதல் எனும் நூலின் திறனாய்வினையும், திருமதி சிவஜோதி ஜெயக்குமார் 'வனப்பு' எனப்படுகின்ற கவிதை நூலின் திறனாய்வினையும் வழங்கினர்.

---

## தற்போதைய மாணவர்களுக்கு

# கராத்தே கலை காலத்தேவை!

வி.கிருஷ்ணவேல்
யா/நெல்லியடி மத்திய கல்லூரி,
கராத்தே வருகை பயிற்றுவிப்பாளர்
யாழ்.பல்கலைக்கழகம்

கராத்தே என்பது தற்காப்புக் கலைகளுள் ஒன்றாகும். இந்தக்கலை ஆயுதங்கள் இல்லாத ஒரு போர் அமைப்பைக் கொண்டுள்ளது. இது உடலுக்கும் மனதுக்கும் நன்மை பயக்கும் ஒரு விளையாட்டாகத் திகழ்வதோடு இதற்கு உடல் உழைப்பு மட்டுமல்ல மன முயற்சியும் அவசியமாகின்றது. அத்தோடு உடலுக்கும் மனதுக்கும் இடையே சம நிலையை ஏற்படுத்துவதே இந்தக் கலையின் பிரதான குறிக்கோள். இதற்கு மிக முக்கியமான விடயம் ஒழுக்கம். இதற்கு நாம் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் வலுவாக இருக்கவேண்டும். ஜப்பான் தீவுக் கூட்டத்தில் ரியூக்யுத் தீவுக்கு உரிய போர் முறையையும் சீனாவின் கென்போ என்னும் போர் முறையையும் கலந்து உருவானதுதான் கராத்தே. கராத்தே ஜப்பானில் தோன்றிய தற்காப்புக் கலை என்றாலும் இது இப்போது உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஒலிம்பிக்கில்கூட உயர் நிலையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த விளையாட்டு முறையை யார் வேண்டுமானாலும் பயிற்சி செய்யலாம். சிறு குழந்தைகள் இந்தக்கலையின் அசைவுகளை மட்டும் செய்து பார்ப்பது மிகவும் பொருத்தமானது. கராத்தே தரும் பயன்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியானவை.

### சீர்கேடுகளுக்கான நிவாரணி

இன்றைய சமகால மாற்றங்களாலும் தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் பல நன்மைகளும் தீமைகளும் மாணவர்களைச் சுற்றிக் காணப்படுகின்றன. அதில் ஒரு சில மாணவர்கள் நன்மைகளை அடைந்து கொண்டாலும் பெரும்பாலும் பல மாணவர்கள் தீமையான விடயங்களில் ஈடுபடுவதனால் பல்வேறு இன்னல்களுக்கும் சவால்களுக்கும் உட்படுகின்றார்கள். உதாரணமாக மாணவர்கள் தொலைபேசி விளையாட்டுகளிலும், தொலைக்காட்சி விளையாட்டுகளிலும் ஈடுபடுவதனால் பாதகமான மனவெழுச்சிகளும் மந்த நிலையான அறிவு மட்டமும் தூக்கமின்மை, உடற்சோர்வு, மனச்சோர்வு, கல்வியில் நாட்டமின்மை, ஒழுக்கச் சீர்கேடுகள் போன்ற பின்னடைவு நிலைகளுக்குத் தள்ளப்படுகின்றார்கள். அது மட்டுமன்றி இவை உடல் அசைவற்ற விளையாட்டாகக் காணப்படுவதனால் சிறு வயதினிலேயே மாணவர்களுக்கு உடற்பருமன் அதிகரிப்பு, சோம்பேறித் தன்மை ஏற்படுகிறது. இதை மாற்றியமைக்க சிறந்த வழிமுறையாக கராத்தே கலை காணப்படுவதோடு தற்கால மாணவர்கள் இந்தக்கலையைத் தெரிவு செய்வார்களாயின் ஓர் ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பமுடியும். கவனக்குறைவு, மனஇறுக்கம், கவலைப் பிரச்சினைகள், கொடுமைப்படுத்துதல் பயம் போன்றவற்றால் பாதிக்கப்படும் மாணவர்களுக்குக் கராத்தே பயனுள்ளதாகவும் ஒழுக்கம் நிறைந்ததாகவும் காணப்படுகின்றது. இதனைக் கற்பதன் மூலம் மாணவர்கள் தங்கள் ஆற்றலை மாற்றவும், ஓய்வெடுக்கவும், ஆற்றலை வெளியிடவும், அவர்களின் கவனத்தை மேம்படுத்தவும் அவர்களின் கவனச் சிதறல்களை குறைக்கவும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தவும் முடியும். இவை அனைத்தும் நம்பிக்கை மற்றும் தன்னம்பிக்கையைப் பெற முக்கியமான பங்காற்றுகிறது. கராத்தே வகுப்புகளின்போது செய்யப்படும் பல பயிற்சிகள் மாணவர்களின் சமநிலையை மேம்படுத்த உதவுகின்றன. மாணவர்களின் உடல்நலப் பிரச்சினைகளைப் பொறுத்து கீழ் மற்றும் மேல் உடலை ஒருங்கிணைப்பது பெரும் சவாலாக இருக்கும். இருமுனைகளை ஒருங்கிணைப்பு மாணவர்களின் உடலில் வலிமையைப் பெறவும், சுய மரியாதையைப் பெறவும் உதவுகிறது என்பதில் ஐயமில்லை.

### கராத்தே என்பது சண்டையில்லை

கராத்தே என்பது சண்டையிடுதல் என்று பல பெற்றோர்கள் கருதுகிறார்கள். இதனால் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தயங்குகிறார்கள். ஆனால் அவர்கள் அப்படி நினைத்தால் அது தவறு. ஏனெனில் கராத்தே என்பது ஒருவர் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான பொறிமுறையே. தற்காப்பு நுட்பங்களைக் கற்பதன் மூலம் ஒழுக்கம், சுயகட்டுப்பாடு, கற்றல் பரிணாமம், தோழமை போன்றன ஒரு மனிதனில் மேம்படும். பெற்றோர்கள் இதனை நல்ல விளையாட்டாகக் கருதி தங்களது பிள்ளைகளை பயிற்றுவிக்க முன்வர வேண்டும். ஆனாலும் பெற்றோர் மனங்களில் விளையாட்டைக் கற்பதால் பிள்ளை கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் தன்மை குறைவடையும் அல்லது விளையாட்டில் அதிகநேரம் வீணடிக்கப்படும் இதனால் கற்றலில் மாணவன் பின்னடைவைச் சந்திப்பான் என அஞ்சுகிறார்கள். இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் பரவிக் கிடக்கும் உடனடி உணவுப் பழக்கத்தால் உடலும் உள்ளமும் பல்வேறு நோய்களால் அவதியுறும் தன்மை காணப்படுகிறது. இன்றைய அவசர உலகில் அவசியமான உடற்பயிற்சிகளுக்கு நேரமற்று வாழ்ந்து கொண்டிருப்பதே இத்தகைய நோய்களுக்கு வழிவகுக்கும் முதல் காரணியாகும். உடற்பயிற்சி அவசியம் என அறிந்திருந்தும் அதனைச் செய்ய மறுக்க பல காரணங்களும் உள்ளன. இதனால் உடல் பாதிப்பு மட்டுமன்றி மனமும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதில் மன அழுத்தமானது பலரைத் தற்கொலைவரை கூட்டிச் செல்கிறது.

எனவே மனமும் உடலும் ஆரோக்கியமாக இருக்கும் போதுதான் நம்மால் பூரணத்துவமிக்க வாழ்வொன்றை வாழமுடியும். அந்த வகையில் உடலையும் உள்ளத்தையும் வளப்படுத்த உதவும் கராத்தே கலையானது எம்மையும் எம் சமுதாயத்தையும் மேம்படுத்துவதாக அமைகிறது.

இலங்கையில் பாடசாலைகள், பல்கலைக் கழகங்களைப் பொறுத்த வரையில் கராத்தே கலைகள் பயிற்றுவிக்கப்படுவதோடு மாணவர்களுக்கு பல போட்டிகளில் பங்கு பற்றும் வாய்ப்புகளையும் வழங்குகிறது. திறந்த போட்டிகள், பாடசாலை மட்டப் போட்டிகள் எனப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருவதென்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். புத்தகப் படிப்பு, தேர்ச்சி என்ற வட்டத்தினுள் இருந்து மாணவர்களும் பெற்றோரும் விடுபட்டு அதையும் தாண்டி மாணவர்கள் வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களைச் சமாளிக்கும் திறன்களை வளர்க்கும் இந்தக் கராத்தே கலையை பாடசாலை மாணவர்கள் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலம் ஓர் ஆரோக்கியமான மாணவ சமூகத்தை உருவாக்கிக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 அரசியல்கைதிகளுக்காகவும் 17 தேங்காய் உடைத்து வழிபாடு


## மணமகள் தேவை

இந்து கௌரவகுலம் சொந்தமான தொழில் ஸ்தாபனம் நடத்தும் 1993 இல் பிறந்த மணமகனுக்கு மணமகள் தேவை. வேலை அவசியம் இல்லை ஓரளவு படித்திருக்கவேண்டும்.

**077 907 5491**

(cs.52068) (N.1)


யாழ்ப்பாணம், செப். 13

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு குரலற்றவர்களின் குரல் அமைப்பு, நீண்டகாலமாக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள 17 தமிழ் அரசியல் கைதிகளுக்காகவும் 17 தேங்காய்கள் உடைத்து நல்லூரில் நேற்று விசேட வழிபாடுகளை மேற்கொண்டது.

இந்த நிகழ்வில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், முன்னாள் அரசியல் கைதிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ-ம)




## பெயர்மாற்றம்

இல.20, விதானையார் வீதி, கொழும்புத்துறை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **தைரியநாதன் மரியதாஸ்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **தைரியநாதன் மரியநாயகம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **தைரியநாதன் மரியநாயகம்** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cs26195) (N.1) **தைரியநாதன் மரியநாயகம்**



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும்



கடந்த (16.08.2023) புதன்கிழமை அன்று சிவபதமடைந்த

**எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு**

**அமரர்**

**இராமசாமி சண்முகசுந்தரம்**

**(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (14.09.2023) வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று, தொடர்ந்து அவரது இல்லத்தில் முற்பகல் 11.30 மணியளவில் சபிண்டீகரணகிரியையும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*** தயவுசெய்து இதனை ஒரு தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**

**புலோலி வடமேற்கு, புலோலி.** **074 073 8309**

(CS 24743) A-1



![PEOPLE'S BANK]

PEOPLE'S BANK

## தங்கநகை ஏலவிற்பனை அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 30.06.2022 **வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 13.10.2023 (வெள்ளிக்கிழமை), 14.10.2023 (சனிக்கிழமை) ஆகிய திகதிகளில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில்** வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

யாழ். ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கொக்குவில் (நாவலர்) வீதி, தெல்லிப்பளை, மல்லாகம், காங்கேசன்துறை, யாழ். பிரதான வீதி, உரும்பிராய், ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, புத்தூர், சங்கானை, பண்டத்தரிப்பு, சுன்னாகம், கோப்பாய், அளவெட்டி, சாவகச்சேரி, கைதடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி, கல்வியங்காடு, யாழ். கன்னாதிட்டி, இணுவில், பருத்தித்துறை, புலோலி, கொடிகாமம்.

| | |
|---|---|
| **நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி** | **: 12.10.2023** |
| **ஏலவிற்பனை நடைபெறும் இடம்** | **: யாழ் ஸ்ரான்லி வீதிக் கிளை** |
| **திகதி** | **: 13.10.2023 (வெள்ளிக்கிழமை)<br>14.10.2023 (சனிக்கிழமை)** |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திபோடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்**
**பிராந்திய தலைமையகம்**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே.இல. : 021-222 2601**
**தொலை நகல் : 021-222 2602**
**மின்னஞ்சல் : jafrho@peoplesbank.lk**

(N.1)



## மரண அறிவித்தல்

மண்ணில் 17 . 12 . 1937



விண்ணில் 09 . 09 . 2023

### திருமதி நல்லையா அன்னலட்சுமி (அச்செழு)

உடுவிலை பிறப்பிடமாகவும், சுவிஸ் மற்றும் அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்டவருமான நல்லையா அன்னலட்சுமி அவர்கள் 09.09.2023 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நல்லையாவின் அன்பு மனைவியும், வீரகத்தி கண்மணியின் மருமகளும், காலஞ்சென்றவர்களான மணியம், சின்னராசு ஆகியோரின் சகோதரியும், அகிலாண்டேஸ்வரி, சிவகுமார், காலஞ் சென்ற கஜேந்திரகுமார், புஸ்பலதா, பிறேமலதா, ஜெயலதா, சுதேசகுமார், காலஞ்சென்ற பாலகுமார், நந்தகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2023) வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 2619…) A-1



## மரண அறிவித்தல்

பிறப்பு 21 . 12 . 1942



இறப்பு 10 . 09 . 2023

### திரு.தர்மலிங்கம் ஞானலிங்கம்

**(Retired Officer - Sri Lanka Insurance Corporation)**

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.தர்மலிங்கம் ஞானலிங்கம் அவர்கள் 10.09.2023 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் தர்மலிங்கம் நாகரெட்ணம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், சகுந்தலாதேவி அவர்களின் அன்புக் கணவரும், லிங்கவதி (ரதி), ஜெயலிங்கம், பரதலிங்கம், தர்மாவதி, யோகலிங்கம், தர்மரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலகுமார் (கண்ணன்), பாலரஞ்சினி (செல்வி), விஜிதா (விஜி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருசாந்தினி, ராமகிருஷ்ணா, சபேசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சௌமியா, சாகித்யா, மொரிஷா, சாருஜன், ஆத்மிகா ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13.09.2023) புதன்கிழமை அஞ்சலிக்காக பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, நாளை (14.09.2023) வியாழக்கிழமை மாலை 4.30 மணியளவில் பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி, மக்கள், குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு: மனைவி : 071 4317 310**
**பேர்த்தி : 077 6150 337**

(CS 26197) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர்மாற்றம்

இல.9/1. 1ஆம் யூனிட் தருமபுரம் மேற்கில் வதியும் **குமார மாலினிமன்சேகா** ஆகிய நான் எனது பெயரை **குமார மாலினிபொன்சேகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **குமார மாலினிபொன்சேகா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

(cr.25661) (n.1) **குமார மாலினிபொன்சேகா**

## இரண்டாம் ஆண்டு நினைவில்.......





அன்னை மடியில்
01.03.1999

ஆண்டவன் அடியில்
13.09.2021

### அமரர் டினோசிகா ஸ்ரீவாணன்

**பாசம்மிக்க மகளே !**

உம்மைப் பிரிந்து ஈராண்டு சென்றுவிட்டது இருண்டு போய் இருக்கிறது
- எமது சூழல் எல்லாம்
உமது சிரிப்பு முகமும் சிரிப்பின் ஒலியும் ரீங்காரம் இட்டுக்கொண்டிருக்கின்றது
இப்பூமியில் பலகாலம் நீர் வாழ்வீர் சிலகாலம் எமை வாழ வைப்பீர் என்று இருந்தோம்
இன்று நிலைமை அனைத்தும் மாறிவிட்டது இந்த மாற்றங்களின் கருவியாய் நீர் ஆனீர்
அன்பு மகளே ! டினோசிக்குட்டி அணைந்தது எமது ஒளி விளக்கு இன்று
- ஒலியும் இல்லை
ஒளியும் இல்லை ஒழிந்துவிட்டது எல்லாமே இருப்பினும் ஒவ்வொரு கணமும்
- உம்மை எம்
மனக்கண் முன் நிறுத்தி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் நீர் இல்லாத வையகத்தில்.........

**உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய்.

(cs. 52078) (N.1)

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 01 . 1950



மறைவு 25 . 08 . 2022

திதி: 13.09.2023

அமரர்
### சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

(முன்னாள் உரிமையாளர்-
நியூ சரஸ்வதி விலாஸ், பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி)

அன்பின் திருவுருவே அகத்தின் ஒளிவிளக்கே - அப்பா!
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து ஓராண்டு ஆனபோதும்
உமை நாங்கள் இழந்த துயரை ஈடுசெய்ய முடியாமல்
தவிக்கின்றோம் - அப்பா!
எம் வாழ்வில் என்றும் மறையாது! உங்கள் நினைவு
எம் மனதை விட்டு அப்பா!


பொக்கனை வீதி,
ஊரெழு.

குடும்பத்தினர்.

(CS 52076) (A-1)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 26 - 07 - 1929



மறைவு 13 - 08 - 2023

கடந்த (13.08.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த
எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்
### திரு.சுப்பிரமணியம் கனகசபாபதி
(ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான்)

அவர்களின் மறைவுத் துயரினை எம்மோடு பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் சோபகிருது வருடம் ஆவணி 28ஆம் நாள் நாளை (14.09.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

**"துவாரகை"**
**கைதடி மேற்கு, கைதடி.**

**குடும்பத்தினர்.**

(CS 52193) (A-1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 . 12 . 1938



மறைவு 12 . 09 . 2023

### திருமதி புனிதவதி பாலரத்தினம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி புனிதவதி பாலரத்தினம் நேற்று (12.09.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் இலக்குமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் பாலரத்தினத்தின் பாசமிகு மனைவியும், கிருபானந்தன் (நில அளவையாளர் - அவுஸ்திரேலியா, முன்னாள் நில அளவை அத்தியட்சகர் - கொழும்பு), கோமதி (மாவட்ட விதாதா அலுவலர், மாவட்ட செயலகம்; யாழ்ப்பாணம்), கணேசானந்தன் (முகாமையாளர் AIA காப்புறுதி நிறுவனம், கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுதாசினி, மாயகிருஷ்ணன், முருகானந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலான் கிருஷ்ணா, அனொக்சிகா, கரிஷ், ரிசோபன், ரிஷிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சிவானந்தம், சச்சிதானந்தம் மற்றும் திலகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான ரட்ணசபாபதி, சரஸ்வதி, கனகசபாபதி, நடனசபாபதி, விஜரட்ணம், புவனேஸ்வரி, ஞானேஸ்வரி மற்றும் சிவயோகநாயகி, பத்மநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.09.2023) வியாழக்கிழமை முற்கல் 11.00 மணியளவில் அவரது பன்னாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் மணல் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
077 616 3325
077 314 5259

தகவல்:
குடும்பத்தினர்

(cs 52024) (N-1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முன்னிலையில்....

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகின. இதில் உயர் சித்திபெற்று பல்கலைக்கழகத்துக்குத் தகுதி பெற்றவர்கள் பட்டியலில் கிழக்கு மாகாண மாணவர்கள் தேசியத்தில் முதல்நிலையில் உள்ளனர். 68.65 என்ப தாக கிழக்கு மாகாண மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவுச் சராசரி அமைந்திருக்கின்றது. கிழக்குக்கு அடுத்தபடியாக வடக்கு மாகாணம் இரண்டாவது இடத்தில் உள்ளது. வடக்கு மாகாண மாணவர்களின் பல்கலைக்க ழக நுழைவுச் சராசரி 68.09 என்பதாக அமைந்திருக்கின் றது. ஊவா மாகாணம் 66.23 என்ற சராசரியுடன் மூன் றாவது இடத்தில் உள்ளது.

வடமேல் மாகாணம், மேல் மாகாணம், சப்ரகமுவ மாகா ணம், மத்திய மாகாணம், தென்மாகாணம், வடமத்திய மாகாணம் ஆகியன அடுத்தடுத்த இடங்களில் உள் ளன. கடந்த சில வருடங்களாக வடக்கு மாகாணத்தில் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்து வந்த நிலையில், இம் முறை பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதிபெற்ற மாணவர்களின் அடிப்படையில் வடக்கு இரண்டாமி டத்துக்கு முன்னிலை பெற்றுள்ளமை குறிப்பி டத்தக் கது. (அ-ம)

## நல்லூரானுக்கு...

ளது. தீர்த்தத் திருவிழா நாளை காலை 6.15 மணிக் கும், கொடியிறக்க விழா நாளை மாலை 5 மணிக்கும் இடம் பெறவுள்ளன. பூங்காவனத் திருவிழா நாளை மறுதினம் மாலை 4.45 மணிக்கு இடம்பெறவுள்ளது. (அ-ம)

## கழிவுநீரைச்...

தயாரிப்புக் கருவியொன்று மீட்கப்பட்டது.

இது, ரஷ்யப் படைகளால் இர்காப்புக் கருவியாக அடை யாளப்படுத்தப்பட்டு போர்க்களங்களில் பயன்படுத்தப் படும் கருவியாகும்.

ஆறாம்நாள் அகழ்வாய்வுகள் முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நேற்று இடம்பெற்றன. இதன்போதே இந்தக் கருவி மீட்கப்பட்டுள் ளது. அத்துடன் துப்பாக்கி ரவை ஒன்றும் நேற்று மீட்கப் பட்டுள்ளது.

அத்துடன் நேற்று ஒரு மனித எலும்புக்கூட்டுத் தொகுதி முற்றுமுழுதாக அகழ்ந்தெடுக்கப்பட்டிருந்தது. அத்து டன் நேற்றுமுன்தினம் திங்களன்று பகுதியளவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதி யின் மிகுதிப் பாகங்களும் நேற்று முழுமையாக மீட்கப் பட்டன. (அ-ம-இ)

## போதனா....

அலைபேசிகளைக் கொண்டுவருவதும், பயன்படுத்துவ தும் தடை செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சலுக் காக சேர்க்கப்பட்ட சிறுமியின் கை மணிக்கட்டுடன் மருத் துவத்தவறால் அகற்றப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய சர்ச்சையைத் தோற்றுவித்துள்ள நிலையில், மருத்துவம னைப் பணிப்பாளரால் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப் பட்டுள்ளது.

கடமைத்தளத்தினுள் கடமை நேரத்தில் ஸ்மார்ட் கைத் தொலைபேசி பயன்படுத்த முடியாது. சாதாரண கைத் தொலைபேசியைப் பயன்படுத்தலாம் என்று பணிப்பாள ரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-26)

## 12 வயதுப்....

அவர்கள் தங்கியிருந்த அறையில் இருந்து கடிதம் ஒன் றும் மீட்கப்பட்டுள்ளது. அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ள தகவல்களின் கோணத்தில் நடத்தப்பட்ட விசார ணைகளின் அடிப்படையில், நஞ்சருந்திய பேர்த்தியார் சிறுமிக்கும் நஞ்சூட்டியிருக்கலாம் என்று கருதப்படுகின் றது. குடும்பத்தகராறே இந்தத் துர்ச்சம்பவத்துக்குக் கார ணம் என்று நம்பப்படுகின்றது.

சிறுமியின் தந்தை குடும்பத்தை விட்டுப் பிரிந்து பிறிதொரு திருமணம் செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. சிறுமி, பாட்டியின் அரவணைப்பிலேயே இருந்துள்ளார். இத னால் அவர்களின் குடும்பத்தில் முரண்பாடுகள் தொடர்ந் தன என்று தெரியவருகின்றது.

பாட்டியின் மகன் ஒருவர் திருகோணமலையில் உள்ள நிலையில் அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைத் தொடர்புகொண்டு, தாய் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்று பார்க்குமாறு கூறியிருக்கிறார். நேற்றுக்காலை தாயின் நடவடிக்கையில் சந்தேகமடைந்து அவர் அவ்வாறு கூறியிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. அறையில் இருந்து மீட்கப்பட்ட கடிதத்தில், 'சிறுமியை இனிமேலும் என்னால் வளர்க்க முடியாது. அதனால் இந்த முடிவை எடுத்துள்ளேன். எங்களின் உடல்களை உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டாம்.

மருத்துவ மாணவர்களின் தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி சம்பவ இடத்தைப் பார்வையிட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் கோப்பாய் பொலிஸாரால் முன் னெடுக்கப்படுகின்றன. (அ-ம-26)

## நாடெங்கிலும்...




டது. நாட்டில் நாளுக்குநாள் சுகாதாரக்கட்டமைப்பு வீழ்ச் சியடைந்து செல்கின்றது. இதனால் மருத்துவ நெருக்கடி தீவிரமடைந்து நிலைமை கைமீறிக் கொண்டுள்ள நிலை யில், சுகாதாரக் கட்டமைப்பை பலப்படுத்துமாறு வலியு றுத்தி இந்த ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டன.

'நாட்டில் மருந்துகள் இல்லாததால் சுகாதாரக் கட்டமைப்புச் சீர்குலைந்துள்ளது.

தனியார் மருத்துவத்தை வளர்ப்பதற்காக இவ்வாறான நடவடிக்கைகளில் அரசாங்கம் இறங்கியுள்ளதா? என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது. நாட்டின் சுகாதாரக் கட் டமைப்பைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக அதீத வரி களை விதித்து மருத்துவர்களை நாட்டை விட்டு வெளியேற் றும் கைங்கரியத்தைத்தான் அரசாங்கம் செயற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எனவே சுகாதார அமைச்சரை நாடா ளுமன்றத்தில் பாதுகாப்பதை விடுத்து, நாட்டின் சுகாதா ரத்தைப் பாதுகாக்க அரசாங்கத்தில் உள்ளவர்கள் முன் வர வேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட மருத்துவர் கள் வலியுறுத்தினார்கள். (அ-ம-18,9,110,26,19)

## 53 பவுண்...

வீட்டிலிருந்தவர்கள் கோவிலுக்குச் சென்றுவிட்டுத் திரும் பிவந்து பார்த்தபோது இந்தத் திருட்டு இடம்பெற்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர். (அ-ம-26)

# ரயில் சேவை அத்தியாவசியம்!

கொழும்பு, செப். 13

ரயில் சேவைகளை, நேற்று நள்ளிரவு முதல் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளீர்த்து வர்த்தமானி அறிவித்தல் வெளி யிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ரயில் இயந்திர இயக்குநர்கள் நாடளாவிய ரீதியில் நேற்றுப் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பல ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டன. தெற்கில் ரயில் மார்க்கங்கள் மக்களின் போக்குவரத்தில் பிரதான அங்கம் வகிப்பதால் பலர் அசௌகரியங்களுக்கு உள்ளாகினார்கள். மட்டுப்படுத்தப்பட்ட ரயில் சேவைகளே நடைபெற்றதால், இடமின்மையால் ரயில் மேற்பகுதியில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த நிலையிலேயே ரயில் சேவைகளை அத்தியாவசிய சேவைக்குள் உள்ளீர்த்து வர்த் தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது. ஒரு துறையை அல் லது சேவையை அத்தியாவசிய சேவையாக்கிய பின்னர் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்கள் நடத்தும் வாய்ப்பு இல்லாமற்போகும் எனபது குறிப்பிடத்தக்கது. (அ-ம)

# ஒளிப்படக் காட்சிகள் யாழ். பல்கலையில்!

யாழ்ப்பாணம், செப். 13

தேசிய நம்பிக்கை நிதியம் இலங்கை- யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்க லைத்துறையுடன் இணைந்து பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஆதரவில் நடத்தும் 'இலங்கையில் ஒரு ஸ்கொட் லாந்து ஓவியர்: எட்வேட் அட்கின்சன் ஹோர்னல்' என்ற ஒளிப்படக்காட்சி நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

நுண்கலைத்துறையின் காட்சிக்கூடத் தில் நிகழும் இந்தக் காட்சி எதிர்வரும் 20ஆம் திகதி வரை இடம்பெறவுள் ளது.

நிகழ்வில் 19ஆம் நூற்றாண்டில் மன் னார் முத்துக்குளிப்பு, மலையகத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் தொடக்கம் மற்றும் தென்னிலங்கை மக்களின் பண்பாடு சார்ந்த 43 ஒளிப் படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள் ளன. இந்தக் காட்சியை முன்னிட்டு விசேட கருத்துரைகள் பல்கலைக்கழ கத்திலும் பிரிட்டிஷ் கவுன்ஸிலிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

முதலாவது உரை பிரிட்டிஷ் கவுன்ஸி லில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. 'யாழ்ப்பாணத்தில் ஆரம்ப ஒளிப்படங்களின் வளர்ச்சியில் அமெரிக்க கிறிஸ்தவ மிஷனரி இயக் கம்' என்ற தலைப்பில் இஸ்மத் ரஹீம் உரையாற்றினார். தொடர்ந்து குறுந் திரைப்படம் ஒன்றும் திரையிடப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக கருத்தரங்க மண் டபத்தில் கலாநிதி அகிலன் கதிர்காமர் 'உழைப்பு, திரட்சி, காலனியப்பார்வை' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியி யல் மண்டபத்தில் 'மன்னாரில் முத்தும் பாரம்பரிய மீன்பிடி முறைகளும்' எனும் தலைப்பில் அ.சூசை ஆனந் தன், மறுநாள் 15ஆம் திகதி மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்க ழக கருத்தரங்க மண்டபத்தில் 'கையால் வர்ணம் தீட்டப்பட்ட நிழற்படங்கள்' எனும் தலைப்பில் பா.அகிலன் ஆகி யோர் உரையாற்றவுள்ளனர்.

எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு பிரிட்டிஷ் கவுன்ஸி லில் 'ஒரு படப்புத்தகத்தில் கடந்த காலம்: மன்னார் முத்துக்குளிப்புக்கான ஓர் அறிமுகம்' எனும் தலைப்பில் சேனுக கொரா கருத்துரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 20ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கருத் தரங்க மண்டபத்தில் கலாநிதி அந்தோ னியா லோறன்ஸ் அலன் 'மரபுரிமைத் தொழில்களும் ஓர் எடுத்தாளுநராக, கலை வரலாற்றாசிரியராக தொழிற் படலும்' எனும் தலைப்பில் உரையாற் றுவார்.

அன்றையதினம் பி.ப. 2.30 மணிக்கு 'கன்வஸிலிருந்து கமராவிற்கு: ஈ.ஏ.ஹோர்னலின் கதை' எனும் தலைப்பில் கலாநிதி அந்தோனியா லோறன்ஸ் அலனின் உரையும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. நிகழ்வில் ஒளிப்பட மற்றும் பண்பாடு சார் ஆர்வலர்கள் பங்கேற்று பயனுறு மாறு நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் தா.சனாதனன் அறிவித் துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் சப்பறத் திருவிழாவில்

# சன நெரிசல் காரணமாக மயங்கி விழுந்த மக்கள்!

## அம்புலன்ஸ் சேவை பெறமுடியாமல் வீதியெங்கும் தடைகள்: கெடுபிடிகள்

யாழ்ப்பாணம், செப். 13

நல்லூர் சப்பறத் திருவிழா நேற்று இடம்பெற்ற நிலையில், சன நெரிசல் காரணமாக மக்கள் பலர் மயங்கி வீழ்ந்தனர். அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதற்கு அம்புலன்ஸ் சேவையைப் பெறமுடியாத அளவுக்கு வீதித்தடைகள் ஏற்பட்டிருந்ததால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர். நல்லூர் ஆலய பின்வீதியில் (சிவன்கோவில்) ஏற்படுத்தப்பட்ட வீதித்தடையால் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்கி 8 பேர் மயக்கமுற்ற நிலையில் யாழ். மாநகர சபை சுகாதாரப் பகுதி அலுவலகத்துக்குத் தூக்கிச் செல்லப்பட்டனர். கர்ப்பிணிப் பெண்கள் இருவரும் நெரிசலில் சிக்கினார்கள். பெரும் சிரமத்துக்கு மத்தியில் அவர்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

வீதித்தடைகளால் ஏற்பட்ட சனநெரிசலால் ஆத்திரமடைந்த மக்களும் இளைஞர்களும் ஒரு கட்டத்தில் தடைகளை உடைத்தெறிந்து தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். நல்லூர் உற்சவங்களின்போது வழக்கமாக ஏற்படுத்தப்படும் தடைகளுக்கு கூடுதலாக இம்முறை வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டதால்தான் இந்த நிலைமை என்று பலரும் சுட்டிக்காட்டினர். (ம-125)



இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்துக்கான மாநாடும் பரிசளிப்பு விழாவின் இறுதி நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. வவுனியா பல்கலைக்கழகமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டமும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்தன. பல்வேறு துறைகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கப்பட்டன. (எ-110)


**வாகனம் விற்பனைக்கு**

NPPE .... இலக்கமுடைய Toyota HIACE KPH200,2005 Model, பதிவு 2012, Super GL, வெள்ளை நிறம் நல்ல பாவனையில் உள்ளது.

தொடர்புகளுக்கு: 077 3533 851



**31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

அன்னை மடியில் 12 . 11 . 1971

ஆண்டவன் அடியில் 14 . 08 . 2023



கடந்த 14.08.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் சங்கரப்பிள்ளை சிவகுமார்**

(அபிவிருத்தி உத்தியோகத்தர் - கடற்றொழில் பரிசோதகர் (பதில்) அகில இலங்கை சமாதான நீதவான். மொழிபெயர்ப்பாளர் (தமிழ் - சிங்களம். சிங்களம் - தமிழ்). சிங்கள போதனாசிரியர் - அரச கருமொழிகள் திணைக்களம்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 11.09.2023 திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்பட்டது. இன்று (13.09.2023) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்ளுவதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

ஆனைப்பந்தி, உடுப்பிட்டி. குடும்பத்தினர்

(24744)(N.1)



# TECHNO WORLD

TECHNO WORLD INNOVATIVE IDEAS OPEN NEW WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை)

**இம்முறை தேசிய, மாவட்டரீதியில் முதல் நிலை பெற்ற மாணவர்கள் தொடர்ந்தும் ஆறாவது முறையாகவும் முன்னிலையில்**

**உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு (BIO SYSTEMS TECHNOLOGY**

| Name | Results | Rank | Name | Results | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலக்ஸ்சன் | 2AB | 01 | சஜீனா | C2S | 06 | சனுக்ஸ்சி | 2BC | 18 |
| அஸ்வினி | A2B | 01 | ஜீரோசி | 2CS | 07 | சாங்கீதா | 2CS | 18 |
| நிரோமி | B2C | 02 | சயந்தினி | A2B | 07 | குகப்பிரியா | B2C | 20 |
| அபிவர்சான | B2C | 02 | தனுசா | C2S | 07 | தவருக்சன் | 3C | 22 |
| கனிஸ்கா | 3B | 02 | அர்ச்சனா | B2C | 07 | தர்சிகா | 3C | 22 |
| அன்ரனிஸ் | 3B | 02 | டிலுக்சினி | C2S | 09 | பிரவினா | 2CS | 22 |
| நந்தவி | 3C | 03 | ஜெயதர்சினி | 2CS | 11 | திலக்சிகா | 3C | 24 |
| அகுஸ்ரா | 2BC | 03 | சபிர்னா | A2B | 12 | மிரர்த்தன் | 3C | 24 |
| டென்சியா | 2BS | 04 | ரிகானி | C2S | 12 | தர்சிகா | C2S | 24 |
| ரேமியன் | 3C | 05 | சதுர்சிகா | B2C | 13 | திலக்சிகா | 3C | 24 |
| காவியா | A2B | 05 | யதுர்சினி | 2CS | 13 | தர்சிகா | 3C | 25 |
| செறின் | 3A | 06 | பவித்திரா | 2BC | 14 | சாமந்தி | 3C | 26 |
| தேனுஜா | B2C | 06 | சிவஸ்துதி | B2C | 16 | சுபகரினி | 2BC | 31 |
| அனுசிகா | ABC | 06 | ரகசா | 2CS | 17 | குகப்பிரியா | 2CS | 35 |

**பொறியியல் தொழில்நுட்பம் (ENGINEERING TECHNOLOGY)**

| Name | Results | Rank | Name | Results | Rank | Name | Results | Rank |
|---|---|---|---|---|---|---|---|---|
| திபன்பரபாகர் | 2AB | 01 | ஜானுசன் | 3C | 07 | இனியவன | 3C | 31 |
| கிருபாகரன் | 2AB | 03 | றேங்கில் | B2S | 08 | ராகுலன் | 3C | 39 |
| நிலோஜன் | 3B | 03 | கஜனான் | 2CS | 08 | தனுசாந் | B2C | 40 |
| கனிஸ்ரன் | 2AB | 04 | சிந்துஜன் | 2CS | 09 | சப்றொன் | A2B | 42 |
| பதுசன் | 2BC | 04 | லக்சன் | C2S | 09 | பிரதீபா | B2C | 43 |
| லக்சனா | 2AB | 05 | மார்க்டெக்சன் | C2S | 10 | புஸ்பகுமார் | 3C | 47 |
| மிரின்டா | 3C | 06 | ஜதுசன் | A2B | 10 | அசிவ் | 2CS | 49 |
| சாம்சன் | BCS | 06 | தமிழ்முலகன் | B2C | 24 | விதுசன் | 2CS | 48 |
| மேரி ஜெர்மிலா | A2B | 07 | பகீரதன் | B2C | 27 | பசித் | B2C | 58 |
| | | | | | | மனுஜன் | 2CS | 59 |
| | | | | | | சகீப் | B2C | 59 |

புதிய பிரிவுகள் - A/L 2023 Day Class
A/L 2025

ஆரம்பம் : 16.09.2023 நேரம் : காலை - 8.30

Phone No. 077 017 5346



VILUTHU விழுது Centre for Human Resource Development

# பதவிகள் வெற்றிடம்

1. சிரேஷ்ட சமூக அணி திரட்டுபவர் (Senior Community Mobilizer) - யாழ்ப்பாணம்
2. கள மற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் (Field & Documentation Officer) - முல்லைத்தீவு

விழுது நிறுவனத்தின் சிரேஷ்ட சமூக அணி திரட்டுபவர் (Senior Communty Mobilizer) மற்றும் கள மற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தருக்கான (Field & Documentation Officer) பதவிகள் முறையே யாழ் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் விழுதுக் கிளையில் வெற்றிடமாக உள்ளதனால் பின்வரும் தகைமையுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பதவிகள் கள பணியினை மையப்படுத்தினாலும் ஆவணப்படுத்தல் மற்றும் அறிக்கையிடலிலும் சமனான கவனத்தினைக் கொண்டதாகும். குறிப்பாக நிறுவனத்தின் திட்டச் செயற்பாடுகளின் தரவுகளினைப் பேணுவதாகவும், அவற்றினை உடனுக்குடன் புதுப்பிப்பதும் பணியின் தேவைக்குரிய விடயமாக அமையும். விழுதின் ஆளணியினருடன் இணைந்து செயற்படுபவராகவும், விழுதின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்குக்கேற்பவும் பணிபுரிபவராகவும் இருத்தல் வேண்டும்.

**அடிப்படைத் தகுதிகளும் எதிர்பார்க்கப்படும் பொறுப்புக்களும்**

- சமூகவிஞ்ஞானம் துறைசார் பாடங்களில் அல்லது அதனுடன் தொடர்புடைய கற்கைநெறிகளில் டிப்ளோமா அல்லது இளமாணிப் பட்டப்படிப்பு.
- குறைந்தது இரு வருடங்களாவது சமூகப் பணியில் இணைந்திருந்த அனுபவம்
- நலிவுற்றோரைச் சமூகவலுவூட்டல். பால்நிலைப்குப்பாய்வு, சந்தை முகாமைத்துவம். ஆய்வு முறையியல் மற்றும் கண்காணிப்பு மதிப்பீடுகளில் சிறந்த அறிவும் அனுபவமும் கொண்டிருத்தல்.
- ஆவணப்படுத்துகை ஆற்றல், கற்கைச் சம்பவங்களை உடனுக்குடன் நிதி வழங்குனர்களுக்கு வழங்குவதில் உதவுதல்
- பெண்கள், இளையோர் மற்றும் அல்லது சிறுவர்களுடன் வேலை செய்த அனுபவம் மேலதிக தகமையாக கொள்ளப்படும்
- தகவல்சேகரிப்பு, தரப்பகுப்பாய்வுக் கணிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- பயிற்சிகளை நடாத்தும் ஆற்றல்

**பின்வரும் திறமைகள் மேலதிகத் தகைமைகளாகக் கொள்ளப்படும்.**

- ஆங்கிலஅறிவு
- அடிப்படைக் கணினிஅறிவு (MS Word, Excel, Power Point, Internet & Email)
- சாரதி அனுமதிப்பத்திரம் (Motorbike)
- அந்தந்த மாவட்டம் பற்றிய பரிச்சயம்.

சிரேஷ்ட சமூக அணி திரட்டுபவருக்கான அடிப்படை வேதனம் ரூ. 30,000 வும் கள மற்றும் ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் அடிப்படை வேதனம் ரூ. 45,000 வும் அனுபவத்திற்கேற்ப வழங்கப்படும். தகுதி மற்றும் திறன் அனுபவத்திற்கேற்ப வேதனம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பங்களை உங்கள் சுயவிபரக்கோவை மற்றும் இரண்டு மத்தியஸ்த்தர்களின் தொடர்பு விவரங்களுடன் விழுது. இல. 27A, மகேஷ்வரி வீதி, கொழும்பு– 06 எனும் முகவரிக்கு எதிர்வரும் புரட்டாதி 15ம் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது viluthujobs@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

(cs. 52080) (N.1)

விழுது





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீரவேல் காரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேல் திருக்கைவேல் வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர் மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை"

– திருமுருகாற்றுப்படை




# ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனை உலகமுய்ய

நயினை நா.க. குமாரசூரியர்

முருகன் என்றால் அழகு என்று பொருள். அழகே உருவான அலங்காரககந்தனாக நல்லையம்பதியில் எழுந்தருளியிருந்து தன்னை விரும்பித் தொழும் அடியார்களுக்கு நல்லருள் புரிகின்றார். முருகப்பெருமான் என்றும் அழகுடன் திகழ்வதாலும் இளமையுடன் திகழ்வதாலும் குமரன் என்றும் கந்தன் என்றும் அழைக்கப்படுகின்றான். அழகன் முருகன் நல்லையம்பதியில் வீற்றிருந்து எல்லோரையும் வாழ வைக்கின்றான். உலகமெல்லாம் பரந்து வாழும் சைவ மக்கள் எல்லோரும் கரம்குவித்து வரம் வேண்டி நிற்கும் அற்புதமான தெய்வம் நல்லூர்ப் பெருமானாகும்.

நல்லூர்க் கந்தப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நல்லூர்ப்பிரதேசம் வரலாற்றுச் சிறப்பும் ஆன்மீகச்சிறப்பும் கொண்டதாக விளங்குகின்றது. பலவகைகளிலும் சிறப்புப்பெற்று விளங்கும் நல்லூர்ப் பதியின் சிறப்புக்கு அங்கு அலங்காரக் கந்தனாக - அழகுக்கந்தனாக வீற்றிருக்கும் முருகப்பெருமானின் ஆலயம் முக்கியமானதாகும். முருகன் அடியார்கள் ஆலயத்தைக் கண்டவுடன் அவர்களது மனதிலுள்ள கவலைகள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல பறந்தோடி விடுகின்றது.

உதயசூரியனின் வெண்பொற்கதிர்கள் முருகப் பெருமானின் அழகிய கோபுரத்தின் மீது படர்ந்து பளிச்சென ஒளிவீச மணிக்கோபுரத்தின் மணியோசை ஆலயத்தின் நாலா பக்கங்களிலும் ஒலிக்க அடியார்களை தன் வசப்படுத்தி அருளாட்சி செய்கிறார். வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்தின் சிறப்புகள் அற்புதமானது. தமிழ் மன்னர்களின் ஆட்சியில் இக்கோயில் பெருங்கோயிலாக விளங்கியது. சங்கிலிய மன்னன் நல்லூரை இராசதானியாகக் கொண்டு அரசாட்சி செய்திருக்கின்றான். அந்நியர் வருகையால் அழிவுற்று பின்னர் பெருங்கோயிலாகக்கட்டப்பட்டது.

முத்தர்களும் சித்தர்களும் ஞானிகளும் ஆடிப் பாடி நிற்பது இந்த ஆலயத்தின் சிறப்புச் சான்றாக அமைகின்றது. இவ்வாலயத்தில் முருகப்பெருமானைத் தேரடிச்சித்தர், செல்லப்பா சுவாமிகள்,யோகர் சுவாமிகள் முதலியோர் வழிபட்டு இவ்வாலய வீதிகளில் உலாவி வந்திருப்பது இங்குள்ள சைவ நன் மக்களுக்குப் பெருமை சேர்க்கின்றது. நல்லூர் தேரடிச் சித்தரென போற்றப்பட்ட செல்லப்பா சுவாமிகளின் சீடராக இருந்தவர் யோகர் சுவாமிகள். சைவ நன் மக்களால் இருவரும் மதிக்கப்பட்டவர்கள், போற்றப்பட்டவர்கள். நல்லூர்க்கந்தன் மீது அளவில்லாத பக்தி கொண்டவர் செல்லப்பா சுவாமிகள். நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர் தவத்திருயோகர் சுவாமிகள். நல்லூரிலேயே தவம் கிடந்து ஞான தீட்சை பெற்றவர். மற்றைய இடங்களுக்கு இல்லாத சிறப்பு நல்லூர்த் தேரடிக்கு மாத்திரம் எவ்வாறு வந்தது என்பதை நோக்குவோமானால், செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் போன்றோர் நல்லூர்த் தேரடியில் வாழ்ந்தமை தான் காரணமாகும். இன்று நல்லூர்த் தேரடிக்குத் தனிச்சிறப்புண்டு. தேரடியில் நற்சிந்தனைப்பாடல்கள், திருமுறைப்பாடல்கள், பெரியபுராணம், கந்தபுராணம்,போன்ற சொற்பொழிவுகளும் தேரடியில் பெரியார்களால் நிகழ்த்தப்பட்டு வருவதைக் காணலாம்.

(மறுபக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு திருமுருகன்...

(தொடர்ச்சி)

அடியார்கள் இவற்றைக் கேட்டு பக்தியில் உறைகின்றனர். ஆண்டுதோறும் ஆடிமாதம் பிறந்துவிட்டால் உலகிலுள்ள சைவநன்மக்கள் எல்லோருக்கும் நல்லூர்க் கந்தனுடைய மஹோற்சவம் நினைவுக்கு வந்துவிடும். ஆடி அமாவாசையுடன் கந்தப்பெருமானின் உற்சவம் ஆரம்பமாகி வருடந்தோறும் நடைபெறுவது வழக்கம். இந்த வருட மஹோற்சவம் கடந்த மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகி இன்று தேர்த்திருவிழா காண்கின்றது. இறைவனின் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் என்பன ஒவ்வொரு உற்சவத்தையும் அடியார்களுக்கு நினைவுபடுத்துவனவாக அமைகின்றது. இன்று விடியற்காலையிலிருந்தே அடியார்கள் நல்லூர்க்கந்தன் ஆலயத்தை வந்து சேர்வார்கள். கோயில் வீதிகளெல்லாம் சனசமுத்திரமாகவே காட்சியளிக்கும். நல்லைநகர் வீதிகளெல்லாம் விழாக்கோலம் பூண்டு புனித நகரமாகக் காட்சியளிக்கும். பஜனைக் கோஷ்டிகள் ஒருபுறம், காவடிகள் ஒருபுறம், கற்பூரச்சட்டி ஏந்தும் பெண்கள் ஒருபுறம், அங்கப்பிரதட்சணம் செய்யும் அடியார்கள் ஒருபுறம். பெண் அடியார்களின் அடியளிக்கும் அருட்காட்சி ஒருபுறம். இப்படியாக அடியார்கள் பக்திக் கோலத்துடன் தேர் வீதி உலா வருவது அற்புதக்காட்சி எனலாம். இந்தக் காட்சிகள் உள்ளத்தைத் தொடவல்லது. மெய்சிலிர்க்க வைப்பதாகும். அடியவர்களுக்கெல்லாம் வேண்டியவற்றை வேண்டியவாறு அள்ளிக்கொடுக்கும் வேலவனின் மஹோற்சவத்தை காண அடியார்கள் பல தேசங்களிலிருந்தும் பெருமளவில் வருகின்றார்கள். யாழ்ப்பாணக் கலாசாரத்தை கந்தபுராண கலாசாரம் என அழைப்பது வழக்கம். நல்லூர்க்கந்தன் எம் கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளமை தான் இதற்குக் காரணமாகும்.

*"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்*
*நல்ல மனத்தோடு நாம் பணிந்தால்*
*நல்ல மயில் ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்*
*தேறிவிடும் சிந்தை தெளி"*

அலைகடல் எனத் திரண்ட மக்களுக்கு துயர் போக்கிட நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திப்போமாக












தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| வில்வெட்டு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லைப் பெருமானை நாள்தோறும் தொழுது அருள் பெறுவோம்



நல்லூர்ப் பதிதனிலே நாளும் உறை முருகன்
எல்லையிலா பக்தியுடன் அருள் வேண்டும் அடியார்க்கு
பொல்லா வினைபோக்கி நல்அருளை வழங்கிடுவார்
அல்லும் பகலும் யாம் அவர் அருளை வேண்டிடுவோம்

அன்று முதல் நல்லையிலே நாயகனாய் வீற்றிருந்து
அன்புடனே தொழுவோர்க்கு அருள் வழங்க அமர்ந்துள்ளார்
சென்று யாம் வரம் வேண்ட செழிப்பான வாழ்வுவரும்
அன்புக்கினிய பிரான் நல்லை முருகனை யாம் போற்றிடுவோம்

நாளும் நாம் நலமுடனே நல்லை முருகனை வணங்கிடுவோம்
ஆளும் முருகன் அவர் அன்புடனே நமக்கருள்வார்
சூழும் வினை போக்கியாம் நலமே வாழ்ந்திடவே
நாளும் தவறாமல் நல்லை முருகனையாம் தொழுதிடுவோம்

மாணிக்க லீலாவிநோதன், மறவன்புலம்

## வாழ்வு வளமாக வல்லவனைத் தொழுவோம்!

அல்லலென அஞ்சிநிதம் ஆற்றாது தவிப்பது ஏன்?
வல்லவனை வாயினிக்க முருகா என்றழைத்து
நல்லையுறை வேலவனை நம்பித் தொழுதிட்டால்
நல்லதொரு வாழ்வுவரும் ! நெஞ்சே நீ அறிவாய் !

நாயன்மார்கட்டு ப.மகேந்திரன்

## அலங்காரக் கந்தனுக்கு....




இருபத்தைந்து நாள்கள் திருவிழாக் கோலம் பூண்டு
நல்லூரின் நாயகனாய் எழுந்தருளும்
அலங்காரக் கந்தனே

பல்வித வாகனங்களில் பற்பல அவதாரங்களில்
வரும் உம்மைத் தரிசிக்க
கூடும் அடியார்களின் இன்ப, துன்பங்களை ஒழித்தருளுக

ஷஸ்டிகா செந்துராஜ், செட்டித்தெரு


JAFFNA ELECTRICALS
ஜப்னா இலக்ரிக்கல்ஸ்






JAFFNA ELECTRICALS
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 23 53 | Fax: 021 222 4302
Email: jaffnaelectricals@yahoo.com
Web: www.jaffnaelectricals.com

நல்லூர் கந்தன் அருளாட்சி அகிலமெங்கும் பெருகிட
பிரார்த்திப்போம்
சிறி கஜமுகன் ஜுவல்லர்ஸ்
தங்கப்பவுண் நகை வியாபாரம்



ஓடர் நகைகள் குறித்த தவணையில்
உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்.
இல.26, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 4250 / 077 5425 720

நல்லூர் கந்தன் அருளாட்சி அகிலமெங்கும் பெருகிட பிரார்த்திப்போம்



கணேசன் ஸ்ரோஸ்
KANESAN STORES
Wholesale & Retails Dealers in Textiles
சாறி. சல்வார். ஆண்களுக்கான சேட் ரீசேட் மற்றும்
சிறுவர்களுக்கானசகல ஆடைவகைகள் அனைத்திற்கும்
நாடவேண்டிய ஒரே இடம்
201, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
K.K.S. Road, Jaffna.
Tel: 021 2222 830
077 445 7344

நல்லூர் கந்தன் அருளாட்சி
அகிலமெங்கும் பெருகிட
பிரார்த்திப்போம்
வினோ
நகைப் பூங்கா
தங்க வைர நகை வியாபாரம்
Vino Nakai Poonka
Gold & Jewel Merchant



அசல் 22 கரட் தங்க நகைகள் உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் செய்து கொடுக்கப்படும்.
185 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthuriar Road, Jaffna.
Tel: 021 222 5394 / 021 222 9494,
Fax:021 222 2824

தேரேறி வருவாய் முருகா வேண்டும் வரம் தந்திடுவாய் நீயே!
பூரணி
நகை மாடம்



22 கரட் தங்க நகைகள்
ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.
இல. 1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
Tel : 021 222 3121


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தன் அருளாட்சி அகிலமெங்கும் பெருகிட
பிரார்த்திப்போம்

# சசிகா லேணர்ஸ்

# THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக் காரியாலயம்

இல. 57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்

021 221 7578 / 7678

070 301 3011

மல்லாகம்
T.P: 021 224 3393
070 301 3014
077 343 6622

பண்டத்தரிப்பு
T.P: 021 225 2333
071 255 4135
077 434 3798

சங்கானை
T.P: 021 225 1664
070 301 3016
077 434 3149

சாவகச்சேரி
T.P: 021 227 0616
071 577 0616
077 435 3995

யாழ் மத்தி (Town)
T.P: 021 222 8004
070 301 5004
070 301 3017
077 998 6247

நெல்லியடி
T.P: 021 226 0999
071 775 0999
077 261 2446

புன்னாலைக்கட்டுவன்
T.P: 021 224 5001
076 384 0684

காரைநகர்
T.P: 021 225 2454
070 510 2484

வேலணை : T.P: 021 221 5472, 070 301 3012, 077 368 9319



# YARL SMART (Pvt) Ltd

எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு.
நீங்கள் உங்கள் அயலவர்கள். நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியபடுத்தி அவர்களும் எமது Water Fillter பொருத்தினார்கள் என்றால் அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு 1 வருடத்திற்குரிய Sediment Fillter (6ps ) இலவசமாக தரப்படும்.

* One Year Warranty For All Electronic Parts.
* Life Time Free Service Warranty
* Free Water Testing.
* Freely Available Spare Parts
* 24 Hours Breakdoewn Service.




More Information call us
021 430 0044 /076 666 5267


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org